
www.padippakam.com

# கடல்

CHANG...
Danmar...
7500 Holstebro
Danma...

அலை 07 Oct 1991
சமுதாய சஞ்சிகை




படிப்பகம்

www.padippakam.com

# கடல்

கடல் ஆக்கதாரர்களின் கருத்துகளுக்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது. கருத்து மோதல்களுக்கு கடல் களமாக விரும்புகிறது.

ஆசிரியர் குழு :

சுழியோடிகள்

பேசாதீர்கள் செயலபடுங்கள்;

அறிவிக்காதீர்கள் செய்து காட்டுங்கள்

சிறுவர்கள் எழுதும் ஆக்கங்களும், சிறுவர்களுக்காக பெரியவர்கள் எழுதும் ஆக்கங்களையும் அலங்கரிக்க 'மழலைப்பட்டாளம்' என்ற பகுதி காத்திருக்கின்றது.

எழுதுங்கள் வரவேற்கின்றோம்

ஆசிரியர் குழு

'கடல்' இலவசமாக வெளிவரவும் இந்த லங்கன்பீல்ட் நகர தமிழ் மக்களுக்கு பல வருடமாக தன்னாலான சகல உதவிகளை செய்து வரும் 'நோறி' [FRAU. KIRBERG] அவர்களுக்கும், PASTOR HORST- WALTER LAND அவர்களுக்கும் இவர்களின் அறிமுகத்துக்குப் பின்னணியிலுள்ள திரு. R. சுந்தரேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

Kadal

சுழியோடிகள்

படிப்பகம்

www.padippakam.com

# மழலைப் பட்டாளம்



## - சிறுவர் பகுதி -

### மூத்துக்குளித்தல் இலக்கம் 3

1) ஐரோப்பாவில் கடற்கரை இல்லாத நாடுகள் மூன்றின் பெயரைக் குறிப்பிடவும்

2) ஆசியாவில் உள்ள நாடுகள் ஐந்தின் பெயரைக் குறிப்பிடவும்.

3) இலங்கைக்கு ஆங்கிலேயர் வைத்த பெயர் என்ன?

4) ஜேர்மனியில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு 'D' என்ற எழுத்துப் பதிக்கப்பட்டிருப்பது போல 'CH' எழுத்துகள் எந்த நாட்டு வாகனங்களுக்குப் போடப்பட்டிருக்கின்றது?


5) BUNDESBAHN என்பது எதைக்குறிக்கின்றது?

விடைகளை 18.10.91ற்கு முன்னர் கடல் சஞ்சிகையின் புதிய முகவரிக்கு அனுப்பிவைக்கவும். முகவரி மாற்றத்தைக் கவனிக்கவும்.

***

### தற்பெருமை

மனிதனும் சிங்கமும் சினேகிதர்களாக இருந்தனர். ஒருநாள் இருவரும் நடந்து கதைத்துக் கொண்டு சென்றனர். மனிதன் தனது ஆட்களின் பெருமையைச் சொல்லிக்கொண்டு சென்றான். சிங்கமும் விடவில்லை. தனது இனத்தவரின் பெருமையைச் சொல்லிக் கொண்டு சென்றது.



வழியில் ஒரு சிலை இருந்தது.அந்தச் சிலையில் ஒரு மனிதனின் காலடியில் சிங்கம் படுத்திருந்தது.மனிதன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான்.சிலையைச் சிங்கத்திற்குக் காட்டி ''நீ எப்படித்தான் உன்னுடைய பெருமையைப் பேசினாலும் நீ மனிதனின் காலடியில் கிடக்கின்ற வீரந்தான் உன்னிடம் உள்ளது.அதையே சிலையும் காட்டுகின்றது என்று மனிதன் கூறினான்.

இந்தச் சிலையை மனிதன் செய்திருக்கிறான். அதுதான் இப்படிச் செய்துவிட்டான்.இதையே ஒரு சிங்கம் செய்திருக்கும் என்றால்?? சிங்கத்தின் காலடியில் மனிதன் கிடப்பதாகச் செய்யப்பட்டிருக்கும் என்று சிங்கம் கூறியது.

ஒவ்வொருவரும் தமக்குச் சாதகமாகவே எதற்கும் விளக்கம் சொல்லிவிடுகின்றார்கள்''

## மூத்துக்குளித்தல் 2—ன் முடிவுகள்

1) கடல்,உடல்,மடல்,படல்,விடல்,தடல்

2) நீர்மூழ்கிக் கப்பல்

3) குடாநாடு

4) முல்லைத்தீவு

5) சுவிற்சர்லாந்து(SCHWEIZ)

சரியான விடைகளை எழுதியவர்கள் விபரம்....

(1) செல்வி. சி. சிவதர்சினி, 4100 DUISBURG.28

(2) செல்வன். சிவாஸ்கர், 4100 DUISBURG.28

(3) செல்வி. பிங்கலை இராஜேஸ்வரன், 5013 ELSDORF.3.

'பானை நிறைய அறிவு' என்னும் சிரிப்புக் கதைப் புத்தகம் பரிசு பெறும் அதிர்ஸ்டசாலி:

செல்வி. பிங்கலை இராஜேஸ்வரன்,
5013 ELSDORF.3.

## அடியோடு மறந்து விட்டான்

முதியவர் ஒருவர் வீதியின் ஒரு பக்கமாக வந்துகொண்டிருந்தார். அந்த வழியில் ஒரு முரட்டுச்சிறுவன் வழியில் வருபவர்கள் மீது கல்லால்எறிந்து கொண்டிருந்தான்.முதியவர் மீதும் கல்லை எறிந்தான். முதியவருக்குத் தலையில் பலமான அடியாக விழுந்தது.

முதியவர் வலியைப் பொறுக்க முடியாமல் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். சிறுவன் சந்தோசப்பட்டான். சிறுவனிடம் கதைப்பதால் வீண் சண்டைதான் வரும் என்று எண்ணிய முதியவர் எதுவும் பேசமால் வீடு சென்றார்.

அடுத்த நாளும் முதியவர் வரும் போதும் அந்தச் சிறுவன் கல்லால் அடித்தான்.முதியவருக்குப் பலத்த நோவாக இருந்தது.அந்த வழியே முரடன் ஒருவன் வருவது தெரிந்தது.தாங்கமுடியாத வேதனையைக் காட்டிக்

கொள்ளாமல் ''சிறுவனே,இங்கே வா என்று அன்புடன் சிறுவனை அழைத்தார். சிறுவனும் எதற்கும் கவலைப் படாதவனாக முதியவரிடம் வந்தான். ''நானும் பார்க்கின்றேன் நீயும் குறிவைத்தடிப்பதில் வீரனாக இருக்கின்றாய்.இந்தா உனது திறமைக்கு என்னால் முடிந்தது இதுதான் என்று சில நாணயங்களைக் கொடுத்தார். அதோ வருகிறாரே மீசைக்காரர் அவருக்கும் நீ குறிபார்த்தடித்தால் எவ்வளவோ பரிசுகள் தருவார்.முயற்சித்துப் பார். என்று முதியவர் சொன்னார்.

சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. மீசைக்காரர் அருகே வந்ததும்,கல்லால் எறிந்தான். மீசைக்காரருக்குக் கோபம் வந்துவிட்டது.சிறுவனைப் பிடித்து நல்ல அடி போட்டார்.அதன்பின்னர் கல்லால் அடிப்பதைச் சிறுவன் அடியோடு மறந்துவிட்டான்.

(அடியோடு மறந்துவிட்டான் என்பதில் இரண்டு அர்த்தங்கள் வருகின்றன அல்லவா?)

## தெரிந்து கொள்ளுவோம்

போனோவிசன் என்பது ரெலிபோனும் டிவியும் சேர்ந்தது. ரெலிபோனில் கதைக்கும்போது அடுத்தவருடைய உருவத்தை டிவியில் பார்க்கமுடியும்.1993-ன் இறுதியில் ஜேர்மனியில் இந்தப் போனோவிசன் எல்லா இடங்களுக்கும் வந்துவிடுமாம்.

ஸ்பக்கேற்றி எனப்படும் உணவை இத்தாலியர் தமது உணவென்று சொல்லிக்கொள்கின்றார்கள். உண்மையிலே இது சீனாவிலிருந்து 800 வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவிற்கு வந்தது.அமெரிக்காவை ஐரோப்பியர் கண்டுபிடித்த போது இத்தாலியர் தமது உணவாக அறிமுகஞ் செய்தார்கள். அதன்பின்னர் ஸ்பக்கேற்றி இத்தாலியின் உணவாகிவிட்டது.

www.padippakam.com

சண்பாத் எனப்படும் வெய்யிலில் குளிக்கின்றன மலேசியா நாட்டின் மட்ஸ்கீப்பர் எனப்படும் மீன்கள். தரையில் வந்து படுத்திருக்கும் போது இவை வாயினால் சுவாசிக்கின்றன.

உலகத்தில் கல்வியறிவு கொண்ட நாடுகளில் ஐஸ்லாந்து 99.9% முதலாவதாகவும், சுவீடன் 99% இரண்டாவதாகவும் உள்ளன. இலங்கையில் ஆண்களில் 91% பெண்கள் 81% கல்வியறிவு கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் இந்தியாவில் ஆண்களில் 47% பெண்களில் 25% கல்வியறிவு உள்ளவர்கள்.

** உடலின் இரத்த ஓட்டம் பற்றி முதன் முதலில் கண்டுபிடித்துச் சொன்னவர் வில்லியம் ஹார்வி என்ற ஆங்கிலேயர்.

** இந்தியாவைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டு அதில் வெற்றி பெறாத போதிலும் ஐரோப்பியர் காலடிவைத்துப் பார்க்காத பல தீவுகளைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ். அமெரிக்காவைக் கண்டுபிடிக்க இவரது பயணம் உதவி இருக்கின்றது.
அமெரிக்கவெசுபுசி என்பவர்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

** இலங்கையின் நீச்சல் வீரரான ஆழிக்குமரன் ஆனந்தன் ஆங்கிலக்கால்வாயை நீந்திக்கடக்கும் சாதனையின் போதே மரணமானார்.

அன்புடன் வாசகர்களுக்கு!
சிறுவர்களின் கையெழுத்துக்களுடன் வரும் 'முத்துக்குளித்தல்' விடைகளே ஏற்றுக் கொள்ளப் படும்.

— சுழியோடிகள் —



படிப்பகம்

www.padippakam.com

# தாவடிக்குஞ்சன்

[இறுதி அங்கம்]

"வணக்கம்!" தெரிவித்தான் பிரசன்னா. பதிலுக்கு அவள் 'Hallo!' என்றாள். இவனுக்கேனோ அது பிடிக்கவில்லை.

இப்போதுதான் அவள் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தான். கண்ணும் மூக்கும், சீனாவையும் மலேசியாவையும் ஞாபகப்படுத்தியது.

"தகப்பன் பெயர் வாசன்" என்று அண்ணன் அறிமுகப்படுத்தினார். தாய்---?! சிலவேளை சீனாவாகவோ, மலேசியாவாகவோ இருக்கலாம். 'எதுவாக இருந்தால் எனக்கென்ன?' என நினைத்தவனாய் எல்லோரையும் அழைத்துக் கொண்டு கார் நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தான். அண்ணன் இடம்பம் பின் இருக்கையில் அமர்ந்து கொள்ள, 'சீனா' முன்னுக்கு வந்து அமர்ந்து கொண்டது. பிரசன்னாவுக்கு இவள் முன் இருக்கையில் இருந்தது பிடிக்கவில்லை. இதுவரை அவன் எந்தப் பெண்ணையும் முன் இருக்கையில் அமர்த்தியதில்லை. கீர்த்தனாவை அமர்த்தி இந்நாடு முழுவதும் சுற்றுலா வர எவ்வளவோ கற்பனைகள் செய்து வைத்திருந்தான். அவ் நினைவு இன்னும் குவைத்தின் பெற்றோல் கிணறு எரிவதுபோல் எரிந்து கொண்டிருந்தது.

அண்ணன் பிரயாணக் களைப்பால் உறங்கிவிட்டார். எல்லோரும் மௌனமாக இருந்தது இளங்கோவிற்குப் போர் அடித்திருக்க வே

www.padippakam.com

ண்டும். "சித்தா! எனக்கு தூக்கம் வருகிறது. 'கசெற்'றை 'ஒன்' பண்ணி விடுங்கோ" என்றான். பிரசன்னாவும் 'கசெற்'றை 'ஒன்' பண்ணினான்.

'சின்னஞ் சிறுவயதில் எனக்கோர் சித்திரம் தோணுதடி'

ஜேசுதாஸின் இனிமையான பாடல். இளங்கோ, அண்ணி இருவரும் இரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சீனாவுக்கு பாடல் பிடிக்கவில்லை. "இளங்கோ! இப்போ எனக்கு 'போர்' அடிக்குது" என்றாள். பிரசன்னா கேட்காதமாதிரி இருந்துவிட்டான்.

வீட்டிற்கு வந்ததும் அண்ணிக்கு, பிரசன்னாவின் அறையைப் பார்த்ததும் ரொம்பப் பிடித்திருந்தது. வெளிப்படையாகவே பிரசன்னாவைப் புகழ்ந்தாள்.

அரை மணி நேரத்தில் பிரசன்னா சூடாக உணவு பரிமாறினான். பெண்களை விட ஆண்கள் மிக விரைவாகச் சமைப்பார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இரு பெண்களுக்கும் அது ஆச்சரியமாக இருந்தது. போசனம் முடிந்ததும் அண்ணி பிரசன்னாவைத் தனிமையில் அழைத்து,

"தம்பி, பிருந்தாவை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.

பிரசன்னாவிற்கு அரைகுறையாக விளங்கிவிட்டது. பிரசன்னா எதுவும் பேசத் தோன்றாமல் மௌனமாய் இருந்தான். அண்ணி தொடர்ந்தாள்.

"ரொம்ப நல்ல பிள்ளை. B.Com. பட்டதாரி. அண்ணனுக்கு இந்தப் பெண்ணை உங்களுக்கு செய்து வைக்கவேணும் என்று ஆசை. பெண் வீட்டாருக்கும் உங்களைச் செய்வதில் ரொம்ப இஷ்டம். அண்ணன் சொல்லை நீங்கள் தட்ட மாட்டீர்கள் என நினைத்தே இந்த ஏற்பாட்டைச் செய்தோம்."

மூச்சு விடாமல் அண்ணி சொல்லி முடித்துவிட்டாள். பிரசன்னாவிற்கு மூச்சுவிடவே கஷ்டமாக இருப்பதுபோல் இருந்தது.

"எதற்கும் ஆறுதலாக யோசித்துச் சொல்கிறேன். முதலில் நீங்கள் போய் 'றெஸ்ற்' எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அப்போது

www.padippakam.com

தப்பிக் கொண்டான். இரண்டொரு நாட்கள் அண்ணன், அண்ணி இதைப்பற்றி பேச்செடுக்கவில்லை. அவர்கள் பிரசன்னாவிற்கு சம்மதம் என்று நினைத்திருக்க வேண்டும். ஒருநாள் அண்ணனாகவே ஆரம்பித்தார்.

"தம்பி, சீதனத்தைப்பற்றி நாம் எதுவும் கதைக்கத் தேவையில்லை. ஒரேயொரு பிள்ளை. லக்கச்சக்கமான சொத்திருக்கு. கல்யாணத்தை எப்போது வைப்பது எங்கு வைப்பது என்று மட்டும் நீ சொன்னால் போதும்."

பிரசன்னாவிற்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு,

"நீங்கள் ஊருக்குப் போனதும் போன் பண்ணிச் சொல்லுகிறேன்" என்றான்.

"போன் பண்ணிச் சொல்லுவதை இப்பவே சொல்லன். ஏன் பெண்ணைப் பிடிக்கவில்லையா?"

அண்ணன் பிடிவாதமாக முடிவைச் சொல்லும்படி நின்றார்.

"அண்ணா, என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம். எனக்கு இந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை என்றில்லை. எந்தப் பெண்ணையுமே பிடிக்கவில்லை. நான் கல்யாணம் செய்து கொள்வதாக இல்லை"

அண்ணனுக்கு முகம் எல்லாம் சிவந்துவிட்டது. ஆத்திரத்தோடு,

"நீ யாரையாவது விரும்புகிறாயா?" என்று கேட்டார்.

பிரசன்னா பதில் பேசாதிருந்தான். அண்ணன் தம்பிக்குள் பயங்கர அமைதி; உறவில் விரிசல். நாட்கள் உருண்டன. அவர்கள் நாடு திரும்பும் நாளும் வந்தது. பிரசன்னா விமான நிலையம்வரை போய் அனுப்பி வைத்தான். போனவர்கள் போன் பண்ணவுமில்லை; லெட்டர் போடவுமில்லை.

பிரசன்னாவிற்கு மனதிற்குள் சங்கடமாக இருந்தாலும், லெட்டர் போடவோ போன் பண்ணவோ இஷ்டமில்லை. வேலையும், வீடுமாக பிரசன்னாவின் வாழ்க்கைச் சக்கரம் உருண்டு கொண்டிருந்தது. கீர்த்தனாவின் ஞாபகம் இன்னும் பிரசன்னாவை உண்ணவோ, உறங்கவோ விடவில்லை.

பொழுது போக்கிற்காக சினிமாப் படத்தைப் போட்டுப் பார்த்தால், கதாநாயகன் கதாநாயகி கனவு



படிப்பகம்

www.padippakam.com

காண்கிறார்கள். ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள். கனவில் கூட கீர்த்தனாவைப் பார்க்க முடியவில்லை. இன்று கனவில் கீர்த்தனாவைப் பார்க்க வேண்டும் என்று ஆசையோடும், ஆவலோடும் படுக்கைக்குப் போனான்.

அவன் எதிர்பார்த்ததிற்கு மாறாக அண்ணனுக்கு திருமணம் நடப்பது போலவும், பிரசன்னா வியத்திற்குள்ளாகி, பல்லெல்லாம் கொட்டுப்படுவது போலவும் கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்தான்.

வாழ்க்கையில் நிம்மதியில்லை. சலிப்போடு வேலைக்குப் போய் வந்து 'லெட்டர் பொக்ஸை' திறந்து பார்த்தான்.

லெட்டர்: FROM
MRS. அகிலன், Canada.

ஆவலோடு பிரித்துப் படித்தான்.

'அன்பான தம்பிக்கு!

மிகவும் துன்பத்தோடு எழுதுவது. எப்படி ஆரம்பிப்பது, எப்படி முடிப்பது என்று தெரியவில்லை. மனதைத் தேற்றிக் கொள்ளவும். உங்கள் அண்ணன் 08-08 இல் -----

அங்கிருந்து வந்ததில் இருந்து ரொம்பக் குடிக்க ஆரம்பித்துவிட்டார். இதனால் அவர் ஈரல் ரொம்பப் பாதிப்படைந்துவிட்டது. டாக்டர் எவ்வளவு சொல்லியும் அவர் குடிப்பழக்கத்தை நிறுத்தவில்லை. உங்கள் விசயம் முழுவதும் உங்கள் நண்பன் அரவிந்தன் சொல்லிவிட்டார்.

ஏனோ அவர் தனக்கொரு பிள்ளை இருப்பதையும், மனைவி இருப்பதையும் மறந்து நீங்கள் பிருந்தாவைத் திருமணம் செய்யாதது பெரிய இழப்பாக நினைத்து, இன்று என்னையும் இளங்கோவையும் அநாதைகளாக்கிவிட்டார்.

இந்தச் சம்பவத்தை உங்களுக்கு உடனே தெரியப்படுத்தக் கூடிய நிலையில் நான் இல்லை----'

பிரசன்னாவால் மேற்கொண்டு வாசிக்க முடியவில்லை. 'என்ன முட்டாள்தனம்?! எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் பறந்து வந்து வெளிநாட்டு நாகரீகங்களில் வாழ்ந்தாலும் மனிதாபிமானமற்ற மனிதர்களாகவே இருக்கிறார்கள். இலங்கையில் அப்பாவித் தமிழர்களின் இறப்பைத் தவிர்க்க முடியவில்லை. அது கொடுமை. வெளிநாடுகளில் முட்டாள்கள் முட்டாள்தனமாக இறப்பது கொடுமையில்லை; கொழுப்பு' என நினைத்துக் கொ



படிப்பகம்

www.padippakam.com

ண்டு லெட்டரைத் தொடர்ந்தான்.

'--- தம்பி, என்னை மன்னிக்கவும். இந்த நிலையிலும் உங்களுக்கு அதிர்ச்சி தரும் ஒரு விஷயத்தை எழுதப் போகிறேன். சரியோ, தவறோ எனக்



குத் தெரியவில்லை. வேறு வழியும் தெரியவில்லை. அண்ணன் இறந்த பின் எனக்கு இங்கு தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது. இந்தச் சுதந்திரமான நாட்டில், இந்நாட்டுப் பெண்கள் சுதந்திரமாக வாழ முடியும். ஆனால் நம் நாட்டுப் பெண் தனிமையில் வாழ்வது இயலாது. இதைப்பற்றி உங்களுக்கு விபரமாக எழுதித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. அண்ணன் செத்து ஒரு கிழமை செல்ல முன்பே டெலிபோன் அழைப்பு விடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் டெலிபோனைக் 'கட்' பண்ணிவிட்டேன். என்னுடைய இப்போதைய குறிக்கோள் இளங்கோவை நல்ல முறையில் படிப்பித்து, நல்ல முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதுதான். அதற்கு உங்களின் உதவி எனக்குத் தேவை. அண்ணி தாய்க்குச் சமனானவள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எனக்கு எழுதவே கை நடுங்குகிறது. ஆனால் எழுதித்தான் தீர வேண்டும். உங்களை இங்கு எடுப்பித்து, உங்கள் மேற்பார்வையில் இளங்கோவை வளர்க்க வேண்டும் என்ப



படிப்பகம்

தே என் விருப்பம். நீங்கள் இங்கு வந்திருந்தால் சமுதாயம் பல மாதிரி கதைக்கும். சில சட்டப் பிரச்சனைக ளையும், நமது சமுதாயம் கதைக்கப் போகும் பிரச்சனைகளையும் நினைத்து சட்டத்திற்காகவும் சமுதாயத்திற்காக வும் இளங்கோவிற்கு அம்மாவாக்க விரும்புகிறேன்.

இதில் நீங்கள் என்னுடைய உ ண்மையான எண்ணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களைப்பற் றி எனக்கு எல்லாம் தெரியும். நீங்க ள் கீர்த்தனாவைத் தவிர வேறு யாரை யும் திருமணம் செய்யமாட்டீர்கள்; கீர் த்தனா திருமணமே செய்து கொள்ள மாட்டாள் என்பதையும் அறிந்த பின்பே இந்த முடிவுக்கு வந்தேன். கீர்த்தனா வும் நீங்களும் இதய தீபங்களாக இரு ந்து எங்களுக்கு ஒளி விளக்காக இரு க்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

உங்கள் பதிலை எதிர்பார்க்கும்

அண்ணி.

லெட்டரைப் படித்து முடித்ததும் பிர சன்னா அவசரமாக அண்ணிக்குப் பதில் எழுதினான்.

பெருமதிப்பிற்குரிய அண்ணிக்கு,

உங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை.

சட்டம் ஒரு இருட்டறை என்று அ றிஞர் அண்ணா சொன்னார். அதே போல் நம் சமுதாயமும் இருட்டறை தான். அது நமது சாபக்கேடு.

உங்களுடைய உண்மையான எண்ணத்தைப் புரிந்து கொண் டேன். நான் அங்கு வருவதற்குண் டான சட்ட ஒழுங்கைச் செய்யவும்.

இப்படிக்கு
தம்பி
பிரசன்னா. "

• முற்றும் •

அறிவித்தல்:

இதுவரை 'கடல்' வெளியீட்டாளராகவும், சுழிபோடிகளில் ஒருவராகவும் பணியாற்றிய திரு. பீற்றர் குலம் சகல பொறுப்புகளிலிருந்தும் விலகிக் கொள்கிறார்.

இவ் அறிவித்தல் அவரின் வேண்டுகோளி ன் பேரில் பிரசுரமாகிறது.

- சுழிபோடிகள் -

# இன்று முடியுமா?

பீற்றர் இளவம்

அன்று பல இளைஞர்களை
இலங்கை அரசு திருட்டுத்
தனமாக முகாம்களுக்குள்
கொலை செய்தது
இன்று பிரதி எடுக்கிறார்
எம்மவர்கள் - - - !
அன்று இலங்கை அரசு
அடக்குவதை எதிர்த்து
போராட முடிந்தது
இன்று எம்மவர் எம்மவரை
அடக்குவதை எதிர்த்து
குழற முடியுமா ?
அப்படி குரல் கொடுத்தோர்
இருந்ததுண்டோ - - - ?!
அன்று கைதானவரைப் பார்க்க
பெற்றோரால் முடிந்தது
இன்று எம்மவரால் கைதியாகும்
மக்களைக் காண
அனுமதி உண்டா ?!
அன்று சுவர்களில்
எழுத முடிந்தது.
இன்று முடியுமா ?!
இவர்களில் - - - -
அன்றா இன்றா
பலமுள்ள எதிரிகள் ?

# காலை மாலை

- அருள்மாதவன்

காலையிலே எழுந்தவுடன்
காலைக்கடன் முடித்துவிட்டு
வேலைக்குச் சென்றுவிட்டோம்
வேலையிலே எத்தனை வேலை
முடித்து வந்தோம் வீடு
மது இருந்தால் மது
புகை இருந்தால் புகை
மாலை இனிமையாய் கழிய
சாப்பிட்டும் சாப்பிடாமலும்
உறங்கிவிட்டு - - - -
மீண்டும் வேலை, மது, புகை என
வாழும் நம் இளைஞர்களே
என்ன வாழ்க்கை இது
எத்தனை காலங்கள் உருண்டுவிட்டன.
எம் முயற்சிதான் என்ன?!
எப்போ நம் நாடு செல்வது ?!
எங்கே புறப்படுவோம்
புதியதொரு பாதையிலே - - - -
வாருங்கள் ! வாருங்கள் !!

# வாங்கவில்லை!

சீதனம் ஒழிகவென
போதனை செய்தவன்
அவளைத்தான் மணம்முடிக்க
சீதனம் வாங்கவில்லை
அது மட்டுமா - - - - அவள்
சம்மதமும் வாங்கவில்லை.

- இராஜன் முருகவேல்.

# வேள்வி ஆடுகள்

- ஜென்ஸ்மலர் -

தோழனே உறங்குகின்ற
உணர்வுகளைச் சற்று
மீட்டுப் பார்
அது ஒரு சோகக் கதை
வாழ்வு தேடி வந்து
வஞ்சிக்கப்பட்ட எங்கள்
தமிழரின் கண்ணீரை
எண்ணிப் பார்
உண்ண உணவு தந்து
உடுக்க உடை தந்து
நம்மை நேசிப்பதாகக்
கூறியவர்கள் - - - .
பந்தை விட கேவலமாக
நடாத்தப்படும் அநாதை
சூழலில் வாழும் எம்மக்கள் அங்கே !
பிரச்சனை தீராமல் திட்டமிட்டு
இங்கு வட்டமேசை போட்டு
அனுப்பப் போகிறார்களாம்
நாட்டுக்கு ( வேள்விக்கு )
உணர்வில் கலந்த எங்கள்
சோகவரிகளை மனதில்
பதித்து வை நாங்கள்
வேள்விக்காக வளர்க்கப்பட்ட
ஆடுகள் - - - !

www.padippakam.com

# முத்தாரம்

'கடல்' சஞ்சிகையில் சில ஆக்கங்கள், சிறு திருத்தங்கள் செய்யப்படுமாயின் கடல் சஞ்சிகை பொலிவு பெறும்.

குறுக்கெழுத்துப் போட்டி, இடமிருந்து வலமாகவோ அல்லது மேலிருந்து கீழாகவோ வாசிக்கும்போது ஒவ்வொரு நிரல்களும் ஒன்றுக்கொன்று தொடர்பாக இருக்கும்படி தயாரிக்கப்படுவதே சிறப்பானதும், தமிழுக்கு பெருமையும் உடையது என்பது எனது கருத்து.

சிறுவர்களுக்கான 'மழலைப் பட்டாளம்' சிறுவர்களினால் புரிந்து கொள்ளும்படி எழுதப்பட வேண்டும்.

விஞ்ஞான ரீதியான ஆக்கங்களும் பொது அறிவுச் செய்திகளும், பெற்றோர்களினாலேயே புரிந்து கொள்ள முடியாத ஆக்கங்களை எழுதுவது அவசியமில்லை.

'முத்துக்குளித்தல்'ஐ வரவேற்கிறோம். அந்த ஆக்கமும் 'சிறுவர்கள்' என்ற வயதெல்லையை மீறாமல் இருந்தால் சரி.

— செல்விகள் ஆனந்தி, சாந்தி,
(யாழ்ப்பாணம்) ஜேர்மனி.

•••

'கடல்'

... சமுதாய சஞ்சிகையாகவே இருக்கட்டும்.

— இரா. சிவரஞ்சன்,
5012 BEDBURG.

•••

வரவு 'கடல்' தன்னை சமுதாய சஞ்சிகை என நிரூபித்து வருகிறது. 'மழலைப்பட்டாளம்' பல தரப்பட்ட வயதுடைய சிறுவர்களை கருத்திற்கொண்டு தயாரிக்கப்படுவது வரவேற்றுப் பாராட்டப் பட வேண்டியது. சிறுவர், இலக்கியம், அரசியல் என்று சகலதையும் உள்ளடக்கிய பணி தொடரட்டும்.

— R.C. ரூபன்,
OSLO, NORWAY.

•••

'கடல்' என்றும் தொடர்ந்து தனது நற்பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழை வளர்ப்பதற்காக (?!) அரும்பாடுபட்டு வரும் சமுதாய சஞ்சிகையான 'கடல்' தொடர்ந்து சேவைபுரிய வாழ்த்துகிறோம்.

— செல்விகள் திலீபா, நிரோஷா

•••



படிப்பகம்

www.padippakam.com

சகோதரிகள்,
5140 ERKLENZ.

• • •

என் நண்பன் மூலமாக 'கடல்' சஞ்சிகை படிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. 'கடல்' நல்ல கருத்துக்களையும் தரமான ஆக்கங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நந்தன்மாமாவின் 'ஒற்றுமை'யும், தாயடிக் குஞ்சனின் 'இதயத்துடி'ப்பும் நன்றாய் இருக்கிறது.

- திரு. சி. ஜெயந்தன்,
2152 BLIDERSDORF.

• • •

'இது எப்படி இருக்கு' என்ற பகுதி நன்றாக இருந்தது (வாசிக்க--).

- திருமதி. இ. காங்கேயன்,
4200 OBERHAUSEN.12.

• • •

'கிசுகிசு' எல்லாம் கடல் போன்ற சிறுதாய சஞ்சிகைக்குத் தேவைதானா?

- அ. விநோத்,
4000 DÜSSELDORF 2

• • •

இதுபோன்ற சஞ்சிகைகளை எங்களுக்காகப் படைக்கும் உங்கள் போன்ற முற்போக்கு சக்திகளுக்கு எனது பாராட்டுக்களும், ஊக்கங்களும் கிடைக்கப்பெறுவதாக.

- த. சிவதாசன்,
4630 BOCHUM.1

அன்பான வாசகரே! முற்போக்கு சக்தி என்றால் என்ன என்று எமக்குத் தெரியவில்லை. நாம் உண்மைகளை தனிப்பட்ட ரீதியில் எவரையும் பாதிக்காதவாறு எழுதவே விரும்புகிறோம்.

- சுழியோடிகள்

DUISBURG ல் இருந்து ஜெகநாத் என்பவர் தனிப்பட்ட ரீதியில் ஒருவரின் பெயர் கூறி தாக்கி எழுதியதால் அதை பிரசுரிக்க முடியவில்லை. அத்துடன் ஜெகநாத்தின் முகவரியாகும் இல்லாததால் அவருக்கு நேரடியாக பதில் அனுப்பவும் முடியவில்லை. சென்ற கடல் 'அலை'யில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் அட்டைப்பட விளக்கம் வெளிவந்ததைப் பற்றி ---- அது சிறுவர்பகுதியுடன் சம்பந்தப்பட்டதல்ல. பெரியோர் 'சிறுவர் பகுதி' அல்லாதவைகளை வேறு பெயரில் எழுதுவது தவறல்ல.

அட்டைப்பட விளக்கங்களாக எமக்கு கிடைத்தவற்றில் அவையே சிறந்தது சிறப்பாக இருந்ததால் பிரசுரித்தோம். மற்றும்படி வேறு எவ்விதமான தனிப்பட்ட காரணமும் இல்லை.

மேலும் 'ஜெகநாத்' தனது முழு விலாசத்தை தெரிவித்தால் தெளிவாக விளக்கம் அளிக்க முடியும்.

- நட்புடன்
சுழியோடிகள்.

• • •

www.padippakam.com

# இரு இந்தியத் தமிழரின் உலக விஜயம்

## சந்திப்பு : சோழியான்

இரு இந்தியத் தமிழ் இளைஞர்கள் 'லங்கன்பீல்ட்' இல் 'கடல்' சஞ்சிகை வெளிவருவதை அறிந்து, எம்மை நாடி வந்தனர். ஆனால் 'சோழியான்' அவர்களை இடையில் சந்தித்து, தமிழ் இளைஞர்கள் தங்கியுள்ள விடுதிக்கு அழைத்துச் சென்றார். 'சோழியான் உட்பட பலரும் அவ்விந்திய வாலிபர்களுடன் உரையாடியதை, அவரே தொகுத்தளிக்கிறார்.

— சுழியோடிகள்.

வாசகர்களே! சென்ற 'கடல்' அலையில் 'சந்திப்பு' என்றொரு கற்பனை தொடரை எழுத ஆரம்பித்ததை அறிவீர்கள். ஆனால் எதிர்பாராத விதமாக நிஜமான 'சந்திப்பு' ஒன்று ஏற்பட்டதால், கற்பனைச் 'சந்திப்பு' அடுத்த 'கடல்'-அலையில் இடம்பெறும்.

வெள்ளை நிற மாருதி 'ஜீப்' வண்டியில் இரு இந்தியச் சுழியோடிகளைத் தேடி அலைகிறார்கள் என்ற செய்தி அறிந்து அவர்களை சந்தித்து 'லங்கென்பீல்ட்'இல் பெரும்பான்மையான தமிழ் இளைஞர்கள் வசிக்கும் விடுதிக்கு அழைத்துச் சென்றேன். அவர்களும் உரையாடலில் பங்குபற்றினார்கள்.

சோழியான்: வணக்கம். முதலில் உங்களைப்பற்றி கூறுங்களேன்.

ஸ்ரீனிவாச ராவ்: நாங்கள் இருவரும் 'எலக்ட்ரிகல் என்ஜினியரிங்' ஒன்றாகப் படித்துப் பட்டம்பெற்றோம். எமது குடும்பம் விவசாயம் செய்கிறது. நாம் இருவரும் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்கள். பாண்டிச்சேரியில் அறிவொளி என்றொரு இயக்கத்தை நடத்துகிறோம். அதில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கத்தவராக உள்ளார்கள். 'அறிவொளி' இயக்கமானது கல்வி அறிவற்றவர்களுக்கு கல்வி அறிவு கொடுக்க வேண்டும் என்பதையே முக்கிய குறிக்கோளாகக்




T. ஸ்ரீனிவாச ராவ் (29), R. ஞானசேகரன் (27)

கொண்டு இயங்குகிறது.

சோழியான்: தற்போது இப்படியான உலகப் பயணத்தை என்ன நோக்கத்திற்காக ஆரம்பித்திருக்கிறீர்கள்?

ஸ்ரீனி: சுற்றாடல் தூய்மைக்காக நாங்கள் பயணம் செய்து பல நாட்டு தலைவர்கள், வல்லுனர்களை சந்தித்து, அவர்களின் இதைப்பற்றிய அறிக்கைகளைச் சேகரித்து ஐ.நா. சபைச் செயலாளர் Scribe Javier Perez de Cuellar இடம் கொடுக்கப் போகிறோம்.

ஞானசேகரன்: இதுவரை தன்சானியா, சிம்பாவே, நைஜீரியா போன்ற 35 நாடுகளில் சுற்றுப்பயணத்தை முடித்து ஐரோப்பாவிற்கு வந்திருக்கிறோம். உலக சுற்றாடல் பாதிப்பு ஆபிரிக்க நாடுகளிலேயே பெருமளவு உள்ளதால் அங்கே எம



படிப்பகம்

க்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. இத்தாலி போன்ற தொழில்வளம் நிரம்பிய நாடுகள் கழிவுப் பொருட்களை கப்பல் மூலமாக மூன்றாம் உலக நாடுகளை அண்டியுள்ள கடலில் இரவோடு இரவாகப் போட்டுவிட்டு போய்விடுகிறார்கள். இதனால் மூன்றாம் உலக மக்களே பாதிப்படைகிறார்கள். பல ஆபிரிக்க நாடுகளின் கரையோரங்களில் மீன்கள் போன்ற பல உயிரினங்கள் இறந்து கிடப்பதை நேரடியாகவே கண்டோம்.

சோழியான்: இதை எப்படித் தடுக்கலாம் என நினைக்கிறீர்கள்?

பரீனி: 'இன்டர்நாஷனல் கிறீன் பொலிஸ்' என்ற படையை ஐ.நா. சபை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இது மட்டுமல்ல பிரச்சனை. உலகத்திலேயே அதிக மழை பெய்வதற்கான காரணமான மழைக்காடு அமேசன் காடுதான். இது பிரேசிலில் உள்ளது. 'அமெரிக்க மைக் டொனால்ட்' (Mc Donald) கொம்பனி வந்து ஒரு நிமிடத்துக்கு 25 ஏக்கர் மரங்களை வெட்டி, மாட்டுப் பண்ணைகளை அமைத்து, அங்கிருந்து மாட்டிறைச்சிகளை உலகம் முழுதுமுள்ள Mc Donald உணவு விடுதிகளுக்கு அனுப்புகிறார்கள். ஆபிரிக்காவில் 'காயர்' என்று இன்னொரு மழைக்காடு. அதில் பல பகுதியை / அழித்து வாழைத்தோட்டம் [Banana Plantation] வைத்திருக்கிறார்கள். ஐரோப்பாவுக்கு வரும் வாழைப்பழங்களில் பெரும் பகுதி இங்கிருந்துதான் வருகிறது. ஆகவே இந்த அழிவுகளுக்கெல்லாம் முக்கிய காரணம் மேற்கைரோப்பிய, அமெரிக்க நாடுகளே. இத்தகைய நாடுகளால் சூழல் எவ்வளவு தூரம் பாதிப்படைகிறது என்பதை நாம் போகும் நாடுகளில் புள்ளி விபரங்களுடன் விளக்குகிறோம்.

பூமியைச் சுற்றி வாயுப் பகுதி உள்ளது. அதை அடுத்தும் ஒரு வாயுப்படலம் உண்டு. இவ்விரண்டுக்கும் இடையே 'ஓசோன்' என்றொரு பகுதி உண்டு. சூரியனிலிருந்து வரும் நம் உடலை எரித்துவிடக் கூடிய கெட்ட கதிர்களை இந்த 'ஓசோன்' படலம் தடுத்து, நல்ல கதிர்களை மட்டுமே பூமிக்கு அனுப்புகின்றன. பிறிஜ், எயர் கொண்டிசன் போன்ற குளிர் சாதனங்களிலிருந்து வெளியேறும் 'குளோபோ' என்ற வாயு, இந்த ஓசோன் படலத்தை ஏறக்குறைய பத்தாண்டுகளில் சென்றடைந்து ஓட்டையாக்கிறது. இந்த ஓட்டைகள் மூலம் வெளிவரக் கூடிய கெட்ட கதிர்கள் மனிதர்கள் எவரும் வெளியே நடமாட முடியாத சூழலை உருவாக்கப் போகுது. இதனால் அதிகமாக மூன்றாவது உலக மக்களே பாதிப்படையப் போகிறார்கள்.

ஞானா: உலகத்தில் 'குளோபோ' வாயுவில் 95% உபயோகிப்பது வளர்ச்சியடைந்த நாடுகள்தான். தற்போது இந்த 'குளோபோ' என்ற வாயுவுக்கு பதிலாக வளர்ச்சியடைந்த நாடுகள் புதியதொரு வாயுவை உருவாக்கியுள்ளார்கள். இப்புதிய வாயு 'ஓசோன்' படலத்தைப் பாதிக்காது.

பரீனி: இப்புதிய வாயுவைத் தயாரித்தும் பழைய வாயு தயாரிக்கும் தொழில் நுட்பத்தை பணம் பண்ணுவதற்காக இந்தியா, சீனா போன்ற வளர்ந்துவரும் நாடுகளுக்கு விற்றுவிட்டார்கள். இப்படி இந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளைப் பாதிப்படையச் செய்கிறார்கள்.

சோழி: உலகத் தூய்மைக் கேட்டிற்கு வளர்ச்சியடைந்த நாடுகளே காரணம் என்கிறீர்கள். நீங்கள் தற்போது சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குப் போயுள்ளீர்கள். அந் நாட்டு வல்லுனர்கள் என்ன கூறுகிறார்கள்?

ஞானா: பிரான்ஸில் எமக்கு போதிய வரவேற்புக் கிடைக்கவில்லை. சுவிஸ் நாட்டு வல்லுனர் ஒருவர் இதைத் தாங்கள் ஒப்புக் கொள்வதாகவும், ஆனால் மூன்றாம் உலக நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சமமாக வர எண்ணுவதை எப்படி அனுமதிக்க

www.padippakam.com

முடியும் என்றும் கேட்டார்.

மீனி: வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள தொழில் நுட்பத்தை வாங்கும் வசதி மூன்றாம் உலக நாடுகளுக்கு இல்லை. அவர்கள் உணவுப் பிரச்சனைக்கே பெரிதும் திணறுகிறார்கள். அதனால் இந்த வளர்ச்சியடைந்த நாடுகள் சுற்றாடல் தூய்மையை பேண வேண்டும்; இதனால் ஏற்படப் போகும் ஆபத்துகளிலிருந்து மனித குலத்தைக் காப்பாற்ற வேண்டும் என நினைத்தால், தங்களுடைய புதிய தொழில் நுட்பங்களை மூன்றாம் உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

ஞான: உதாரணமாய் எமது நாடுகளில் ஒரு மனிதன் சராசரியாக ஒரு வருடத்தில் ஐந்து கிலோ கடதாசியை உபயோகிக்கிறான். ஆனால் இங்கே ஒருவன் ஒரு நாளில் ஐந்து கிலோ கடதாசியை (சராசரியாக) உபயோகிக்கிறான். இந்தக் கடதாசிக்கான மரங்கள் எமது நாடுகளில் இருந்துதான் வருகிறது. இவன் பணத்தைக் கொடுத்து வாங்குகிறான். பின்பு சுற்றாடல் தூய்மை பற்றி பேச வரும்போது எமது நாடுகளையே குற்றம் காட்டுகிறான். இதையெல்லாம் நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

மீனி: இன்றைக்கு கனடாவில் அமில மழை பெய்கிறது. அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சல்பூரிக்கமிலம் ($H_2SO_4$) மேலே போய் மழையாக கனடாவில் பெய்தது. இது குறித்து தற்போது அவ்விரு நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.
சுவீடனில் உள்ள 170 வாவிகளில் ஒரு உயிரினம் கூட இல்லை. இந்த நிலைமை மூன்றாம் உலக நாடுகளுக்கு வந்து கொண்டிருக்கிறது. இதைத் தடை செய்யும் சக்தி அந்த நாடுகளுக்குக் கிடையாது.

ஞான: அமேசன் காடுகளை அழிக்க அந்த அரசாங்கம் ஏன் அனுமதிக்கிறது என்றால், அந்நாட்டுக்கு வெளிநாட்டுக் கடனாக 150 மில்லியன் டொலர் இருக்கிறது. அதனால் அந்த அரசாங்கம் கடனின் வட்டிக்காகவும், மக்களுடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும், 'மரத்தை வெட்டி பணம் தா' என்று கூறுகிறது.

மீனி: இன்றைக்கு உலகுக்குக் கிடைக்கக் கூடிய ஒட்சிசனில் ($O_2$) 2/3 பங்கு அந்த மழைக் காடுகளில் இருந்து கிடைக்கிறது. இந்தக் கடன் கொடுத்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு உலகத்தின் மேல் அக்கறை இருக்குமானால் ஏன் அந்த கடனை இரத்து செய்யக் கூடாது?!

ஞான: இந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் பெரிய கொம்பனிகளின் வருட இலாபம் 1000 மில்லியன் டொலர். இதோடு ஒப்பிடும்போது 150 மில்லியன் டொலர் எம்மாத்திரம்?!

தோழி: மொத்தம் எவ்வளவு நாடுகளுக்கு போகப் போகிறீர்கள்?

ஞான: மொத்தம் 100 நாடுகளிற்கு இந்த மாருதி 'ஜீப்' வண்டியில் 100,000 கி.மீற். இருபது மாத அவகாசத்தில் பிரயாணம் செய்து ஐ.நா.வில் நிறைவு செய்யப் போகிறோம். இதுவரை முப்பத்தைந்து நாடுகளை முடித்துள்ளோம்.

தோழி: இந்த பிரயாணத்தில் நேர்ந்த மறக்கமுடியாத அனுபவம் ஏதாவது?

மீனி: பல அனுபவங்கள். அவற்றில் இரண்டு முக்கியமானது. சகாரா பாலைவனத்தில் மணல் புயலில் அகப்பட்டு மூன்று தினங்கள் 'ஜீப்'பிலேயே இருந்தோம். அங்கே வீதிகள் இல்லை. எம்மிடமிருந்த திசையறிகருவி வெப்பத்தால் பழுதடைந்துவிட்டது. இனி நாம் இறந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் 'டையரி' எழுத ஆரம்பித்து விட்டோம். பின் இறுதி முயற்சியாக சூரியோதயத்தை திசையாகக் கொண்டு ஒரு கிராமத்தை அடைந்தோம். அங்கே வாழும் 65 இந்தியக் குடும்பங்கள் நாம் மணற்பு



படிப்பகம்

www.padippakam.com

யனில் இருந்து மீண்டதைப் பாராட்டி சிறிது பணமும் வீடியோ கமெரா ஒன்றும் பரிசளித்தார்கள். மற்றது, சிம்பாவேயில் எமது 'ஜீப்' பிரண்டு, நாம் மயிரிழையில் எவ்வித காயமுமின்றித் தப்பினோம். ஆனால் எமது 'ஜீப்'பின் முன்னிருபக்கக் கதவுகள் சரியாகப் பூட்ட முடியாத நிலையில் உள்ளன. புதிய கதவுகள் பொருத்த 1500 மார்க் கேட்கிறார்கள்.

இதைக் கேட்டவுடன் கூடியிருந்த எம்மவரிடையே பரபரப்பு. ஒருவர் பேனையும் பேப்பரும் எடுத்தார். சிறிது நேரத்தில் ஒரு தொகை சேகரிக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

தோழி: இப்படி ஒரு பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டது?

பரீனி: நாங்கள் மாணவர் இயக்கத்தில் சம்பந்தப்பட்டு நிறையப் பொதுச் சேவை எல்லாம் செய்திருக்கிறோம். இதுக்கு எமது குடும்ப நிலைமையும் ஒரு காரணம் எனலாம். நாங்கள் சம்பாதித்துத்தான் அவர்கள் வாழவேண்டிய அவசியம் இல்லை. சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பிள்ளை படித்து 'டிகிரி' வாங்கியதும் குடும்பத்துக்கு உதவ வேணும். அந்த நிலைமை எமக்கில்லை. அந்த உதவியை எமது குடும்பம் நாடவில்லை. அது ஒரு காரணம்.

வாழ்க்கையில் ஒவ்வொருத்தரும் ஏதாவதொன்று சாதிச்சுத்தான் சாக வேண்டும் என்ற இலட்சியத்தில் எமக்கேற்பட்ட ஈடுபாடும் ஒரு காரணம். எங்களுடைய சைக்கிள் பயணத்தைப் பாராட்டி அமெரிக்காவின் பிரஜா உரிமை வழங்கியும் நாம் அங்கே தங்காமல் நாட்டுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கிலேயே உள்ளோம்.

தோழி: சைக்கிள் பயணத்தைப் பற்றியும் கொஞ்சம் விரிவாகக் கூறுங்களேன்?

ஞான: ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டும் என்று முதலில் 1986 ஆம் ஆண்டு அணு ஆயுதத்தை எதிர்த்து 38 நாடுகளுக்கு 60,000 கி.மீற். தூரம் பிரயாணம் செய்தோம். வீட்டில் கூறாமல் 500 டொலருடன் வெளிக்கிட்டு, டெல்லியில் எம்.ஜி.ஆரை சந்தித்தபோது எம்மை வாழ்த்தி மூன்று இலட்சம் ரூபாய் கொடுத்தார். நாம் 1989ல் சைக்கிள் பிரயாணத்தை முடித்ததைப் பாராட்டி வி.ப.சிங் அரசு இந்த 'ஜீப்' வண்டியைப் பரிசளித்தது.

தோழி: சைக்கிள் பயணத்தால் என்ன பலன் கிடைத்தது?

ஞான: வல்லரசுகளை எதிர்த்து அறிக்கைவிட்டு மூன்றாம் உலக நாடொன்றில் இருந்து வெளிக்கிட்டு, 500 தலைவர்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கடிதங்களைப் பெற்று ஐ.நா.வைச் செயலாளரிடம் கொடுத்தோம். அவர் எங்கள் சார்பாக இதைப்பற்றி ஐ.நா.வைக் கூட்டத்தில் 45 நிமிடம் பேசினார். அந்த 500 கடிதங்களும் இன்று ஐ.நா. பொருட்காட்சிசாலையில் உள்ளது. அடுத்து ஒரு அரசியல் நடவடிக்கை எடுக்கும்போது அவற்றையும் கவனத்தில் எடுப்பார்கள். அக்கடிதங்களால் இன்றைக்கு உலகத்தில் என்ன ஆதாயம் ஏற்பட்டிருக்கிறது என்றால் தற்போது 40%மான அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை ஏற்பட்டிருக்குது.

பரீனி: 50 வருடமாக அணு ஆயுதக் குறைப்பே நடக்கவில்லை. றேகனும் கோர்பசோவும் 4%மாக குறைத்தார்கள். புஷ்ஷும் கோர்பசோவும் சேர்ந்து மேலும் 35% குறைக்க உடன்படிக்கை செய்துவிட்டார்கள். இந்த நடவடிக்கை இப்படியே நீடித்தால் 2000 ஆண்டளவில் அணுவாயுதத்தை ஒழிக்கலாம். இதுதான் நாம் அப்போது அறிக்கையில் கொடுத்தது.

வாசகர்களே! தொடர்ந்து வரும் கேள்விகள் மற்ற இளைஞர்களால் கேட்கப்பட்டவை. அவற்றை இங்கு சுருக்கமாக அளிக்கிறேன்.

இந்தியா ஈழத்தமிழ் அகதிகளைப் புறக்கணிப்பது ஏன்?

இங்கே கேள்வியே தவறு. இந்தியா தனது சக்திக்கு மீறி அகதிகளை

ஆதரிக்கிறது என்பதுதான் உண்மை. ஐரோப்பாவில் 4 மில்லியன் அகதிகள்தான் உள்ளார்கள். பாகிஸ்தானில் 3 மில்லியன் ஆப்கானிஸ்தான் அகதிகள் இருக்கிறார்கள். அதேமாதிரி இந்தியாவில் பங்களாதேஷ், இலங்கை அகதிகள் உள்ளார்கள். கம்போடியா அகதிகள் 2 மில்லியன் தாய்லாந்து, மலேசியாவில் உள்ளார்கள். ஆக மொத்தத்தில் 5%மான அகதிகளையே ஐரோப்பா ஏற்றுக் கொண்டிருக்கிறது. எஞ்சிய அகதிகள் மூன்றாம் உலக நாடுகளில்தான் முடக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, பெரும்பான்மையான அகதிகளை வளர முயற்சிக்கிற நாடுகள்தான் கவனிக்கிது.

தமிழ்நாடு, மத்திய அரசுகள் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதாய்ப் பயமுறுத்துகிறதே---?!

சில அதிகாரிகள் தன்னிச்சையாகப் பேசுவதை எல்லாம் பொருட்டாக எடுக்க இடியாது. ஜெயலலிதா பதவிக்கு வர முன்னர் என்ன கூறினார், பதவிக்கு வந்த பின் என்ன கூறினார் என்று கவனியுங்கள். ராஜீவ் காந்தி இறந்தவுடன் எல்லா இலங்கைத் தமிழரையும் திருப்பி அனுப்பப் போகிறோம் என்று கூறி தேர்தலில் நின்றார். முதல்நாள் பதவிப் பிரமாணம் எடுத்தபோது, 'கதி இல்லாத அகதிகளுக்கு எல்லா உதவிகளும் செய்து, அவர்களை மரியாதையுடன் கவனிப்போம்' என்றார். பதவி கிடைக்க முன்பு 'வோட்டு'க்காக திருப்பி அனுப்பப் போவதாகக் கூறினார்.

அப்படியானால் இலங்கை அகதிகளை அனுப்புவதாகக் கூறினால்தான் தமிழ்நாட்டு மக்கள் 'வோட்டு' போடுவார்களா?

அப்படி இல்லை. ஆனால் தேர்தல் நடந்த சூழ்நிலை அப்படிக் கூற வைத்தது. ஏனெனில் ராஜீவ் காந்தி கொலையால் மக்கள் இலங்கைத் தமிழர்மேல் ஆத்திரமாக இருந்தார்கள்.

நாங்கள் என்ன சொல்ல வருகிறோம் என்றால், பொது விசயங்களை முன்னெடுக்கும் உங்களைப் போன்றவர்கள் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான குரலை முன்னெடுக்கலாமே---?!

இந்தக் கேள்வி கடந்த காலத்தை மறந்து கேட்டது போலிருக்கிறது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை 'பந்த்' (ஊர்வலம்) நடந்திருக்கிறது தெரியுமா? ஒரு 'பந்த்' நடந்தால் தமிழ்நாட்டிற்கு எவ்வளவு நட்டம் என்று உங்களுக்குத் தெரியுமா?! 30 கோடி ரூபாய் நட்டம். தமிழ்நாடு என்னவோ நன்றிகெட்டத்தனமாய் நடந்த மாதிரியும், எவருக்குமே இலங்கைப் பிரச்சனையில் அக்கறை இல்லையென்றமாதிரியும் இருக்கிறது உங்கள் பேச்சு.



அண்மையில் தமிழ்நாட்டிற்குச் சென்று வந்த எம்மவர் ஒருவர்: நான் ஒன்று சொல்கிறேன். நான் அங்கே ஒரு உணவு விடுதிக்குப் போயிருந்தேன். அதில் ஒரு 'சர்வரின்' மாதச் சம்பளம் 300 ரூபாய். தினமும் வேலை. ஒருநாள் வேலைக்குப் போகாவிட்டால் 10 ரூபாய் வெட்டு. அதேநேரம் இலங்கை அகதிகளுக்கு மாதம் 150 ரூபாய் உதவிப்பணமாகக் கொடுபடுகிறது. மற்றும் அகதிகளுக்கு முக்கிய உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. உதாரணமாக 5 ரூபாய் விற்கும் அரிசி 55 காசுக்கு விற்கப்படுகிறது. அந்நாட்டு சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவோடு

www.padippakam.com

ஒப்பிடும்போது எம்மவர்களுக்கு கிடைக்கும் உதவி ஒன்றும் குறைந்ததில்லை.

இலங்கையிலுள்ள விடுதலை இயக்கங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?!

இன்று விடுதலைப் புலிகள் இந்தியாவில் இருந்தால் இந்திய அரசு அவர்களை அழித்துவிடும். தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும்; தமிழனுக்கென்றொரு கலாச்சாரம் பாதுகாக்கப் பட வேண்டும் என்றால் அதை நாங்களும் ஏற்கிறோம். இலங்கையைப் பொறுத்தவரையில் பல இயக்கங்கள் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட இயக்கம் கட்டாயம் தேவை. ஏனெனில் உங்களை இலங்கை அரசு 1948-ம் ஆண்டிலிருந்தே உரிமைகளைக் கொடுக்காமல் மிகவும் பாதிப்படையச் செய்திருக்கிறது. இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் எல்லாம், 'வோட்டுப் போடுங்க, இந்தா தமிழீழம் வாங்கி வாறோம்' என்று உங்களை ஏமாற்றினார்கள். அப்படி இருக்கையில் உங்கள் இளைஞர்களை ஒன்று திரட்டி இப்படி ஒரு போராட்டத்தை நடாத்துகிறார்கள் என்றால் விடுதலைப் புலிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

புலிகளைப் பாராட்டும் நீங்கள் ராஜீவ் காந்தியின் கொலையை ஆதரிக்கிறீர்களா ?

இந்தியன் என்ற ரீதியில் அதை விரும்பாவிட்டாலும், நான் ஒரு இலங்கையனாக இருந்தால் அதை நிச்சயம் ஆதரிப்பேன். ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழருக்காக உடன்படிக்கை என்று கூறி, இந்திய சமாதானப் படைமூலம் இலங்கைத் தமிழருக்கு அளப்பரிய கொடுமைகளைச் செய்ததை எப்படி மன்னிக்க முடியும் ?!

தோழி: 'கடல்' சஞ்சிகையை வாசித்திருக்கிறீர்களா ?

ஞான: 'Bonn' இலுள்ள திரு. ஆபால் சோமசுந்தரம் மூலம் 'கடல்' சஞ்சிகையை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதில் ஒர் அளவில், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களால் 50இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று எழுதப்பட்டுள்ளது. இரண்டே இரண்டு தமிழர்தான் கொல்லப்பட்டனர்.

இந்திரா காந்தி கொல்லப்பட்டபோது ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கிய மக்கள் கொல்லப்பட்டனர். அதைப்பற்றி ராஜீவிடம் கேட்கப்பட்டபோது, 'பெரியதொரு ஆலமரம் விழும்போது நிலம் அதிரத்தான் செய்யும்' என்று சாதாரணமாகக் கூறினார்.

இப்படியொரு அழிவு ஏன் தமிழ் நாட்டில் ஏற்படவில்லை என்றால் 'தமிழர்' என்ற உணர்வுதான்.

இந்திய அரசியல்வாதிகள், துக்ளக் போன்ற பத்திரிகைகளை வைத்து, இங்கே வெளிவரும் 'கடல்' போன்ற சஞ்சிகைகள் தமிழ்நாட்டு மக்களை எடை போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

தோழி: இவ்வளவு நேரமாக எமது வினாக்களுக்கு விடையளித்த தங்களுக்கு நன்றி. வணக்கம்.

இருவரும் வணக்கம் கூற உரையாடல் நிறைவு பெற்றது.

திரேசா அவர்களுக்கு தங்களால் இயன்ற பணத்தை சேகரித்து அளித்து, அங்கு சமூகமளித்த யாவருக்கும் இரவுப் போசனம் அளித்துக் கௌரவித்த எமது இளைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

அந்தக் கிராம மக்கள் தினமும் வேதனைகளையும், பல துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டே இருந்தனர். நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் சமாதானம் பெற முடியாமல் தனித்தவண்ணமே இருந்தன. குழப்பங்கள் ஏன் சமாதானம் பெற முடியவில்லை ?! இளைஞர் கோஷ்டிகள் ஒரு நிரந்தரமான நிலைப்பாட்டிற்கு வரமுடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தன. பல குழுக்களின் உரிமைகளை அந்த 'சனநாயக அரசாங்கம்' ஏற்றுக் கொள்ளுமா ?! ஆரம்பமாகியது பதவி மோகம். உருவாகின மக்கள் அழிவுகள். ஈவிரக்கமற்ற முறையில் மீண்டும் குழுமோதல்களும் கொலைகளும்




ஆரம்பித்தன. உண்மைதான். பலம் வாய்ந்த குழுதான் வெற்றி பெற்றது. மக்களின் உரிமைக்காக அல்ல; மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்ல. தமது பதவிக்காக, பதவி வெறிக்காக மீண்டும் தமது தாகம் பதவி மோகம் என்று சொல்லி, மனித இனத்தின அழிப்பு தொடங்கியது.

இப்படியான ஆதிக்கம் தலை தூக்கியபோது தனம் அக்கா அதனை எதிர்த்துப் பேசினார். 'எமக்காக நீங்கள் பாடுபட வேண்டாம். எங்களை உயிருடன் விட்டால் போதும்...' என்று கோரினார். தனம் அக்காவினதோ அல்லது அந்தக் கிராம மக்களினதோ கோரிக்கை இளைஞர்களின் ஆயுத வேட்கைக்கு முன்னால் எம்மாத்திரம் ?!

"அம்மா! எமது உரிமைகள் எப்பவோ பறிபோய்விட்டது. இனிமேல் அதைப் பற்றிப் பேசி என்ன பிரயோசனம் ?! பிரச்சனைகளை தீர்ப்பதற்கெனத் தூக்கப்பட்ட ஆயுதங்களால்தானே இவ்வளவு பிரச்சனைகள் ?! ஆயுதத்திற்குப் பயந்துதானே நாம் இப்படி ஊமைகளாக வாழ வேண்டிய நிலை. ஆயுதமில்லாவிட்டால் அவர்களுக்கு ஏது வீரமும், பதவியும் ?" என்று ஆத்திரத்துடன் சொன்னாள் தர்சிகா.

"தனம் அக்கா !" என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்தான் அந்தக் கிராம லொறி டிரைவர் ராஜாராம்.

"என்ன ராஜாராம்!" என்று கேட்டாள் தனம் அக்கா.

"அக்கா... சாமான்கள் கொண்டு வந்திருக்கிறேன்..." என்று சொன்னான் ராஜாராம்.

"இன்றுடன் பதினொரு நாட்களாக நாங்கள் எல்லோரும் சிவபட்டினி தெரியுமா? இன்றுதான் கொஞ்சம் நிம்மதி. இப்பவும் நீ வராவிட்டால் எங்கள் பிணத்தைத்தான் பார்க்க முடியும்..." என்று சொன்னாள் தனம் அக்கா.

"அக்கா, உங்களுக்குத் தெரியும்தானே---ஆனையிறவில் சில பிரச்சனைகள். அதுதான் வவுனியாவிலிருந்து வர முடியவில்லை." என்று கூறிவிட்டு சாமான்களை 'லொறி' இலிருந்து இறக்க ஆரம்பித்தான்.

அப்போது ஆரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே ஆயுதங்களுடன் நின்று கொண்டிருந்தனர் சில இளைஞர்கள். அதில் ஒருவர்,

"ஏய் தனம் அக்கா--லொறியிலுள்ளதிலை எமக்குத் தே வேண்டியதை எடுக்கப் போறோம்" என்றார்.

"தம்பியவை, இதிலிருக்கிறது இங்கையுள்ள சனங்களுக்கே போதாது. இந்த முறை தரேலாது. மன்னியுங்கோ" என்று அமைதியாகக் கூறினாள் தனமக்கா.

அதைக் கேட்ட இன்னொருவர்,

"தராவிட்டால் லொறியைக் கொண்டு போய்விடுவோம்" என்று துப்பாக்கியை உயர்த்தியபோது, தனமக்காவிற்கு பயத்திற்குப் பதில் கோபமே ஏற்பட்டது.

"டேய்--- இவ்வளவு நாளாய் பட்டினி கிடந்தோம். யார் வந்து சாப்பாடு தந்தது?! யாராவது வந்து ஏனெண்டு கேட்டனீங்களோ?! அதுக்குத் தகுதியில்லை--- இப்ப என்னடாவெண்டா வந்தாட்டினம் சாமானைக் கொண்டு போக--- லொறி வேணுமோ லொறி--- ஏண்டா டேய்--- அரசாங்கமும் நீங்களும் என்ன கூட்டுறவா செய்யுறியள்?! கொஞ்ச நாளைக்கு போக்குவரத்து நடக்கும்... பின்பு என்னடாவெண்டா பத்து நாளைக்கு சண்டை பிடிப்பியள். எல்லாத்துக்கும் சனங்களான நாங்கள்தான் பலியாடுகளோ--- கொஞ்சமாவும் யோசிச்சு நடவுங்கோ---" என்று தன் மனப் பாரங்களை தேக்கவிடாமல் கொட்டினாள்.

இளைஞர்களுள் ஒருவன் திடீரென்று பாய்ந்து தனமக்காவைத் தாக்கினான். அறிவிழந்து மணலில்

www.padippakam.com

விழுந்தான் தனம் அக்கா.

லொறியில் இருந்து சில பொருட்களை அள்ளிக் கொண்டு மறைந்தனர் அவ்விளைஞர்கள்.

சந்திகா தாயின் நிலைமையைக் கண்டு அழுதாள். சினம் தலைதூக்கியது. இயலாமை உணர்ச்சிகளை கட்டிப் போட்டது. அவளால்தான் என்ன செய்ய முடியும் அல்லது அவ் ஊர் மக்களால்தான் என்ன செய்ய முடியும் ?! ஆயுதம் உள்ளவரையில் அவர்களுடைய அதிகாரம்தானே கொடிகட்டிப்பறக்கிறது.

காலையில் தனம் அக்கா வீட்டை வந்தாள் மீனாட்சி.

"அம்மா! மீனாச்சி அக்கா வந்திருக்கிறா.... அம்மாக்கு சுகமில்லை. கொஞ்சம் இருங்கோ... என்ன குடிக்கிறியள்...?!" என்று கேட்டாள் சந்திகா.

"ஓமடி பிள்ளை... வெறும் தண்ணியெண்டாலும் கொஞ்சம் தாவன்" என்றாள் மீனாட்சி.

"என்னணை மீனாச்சி... என்ன விசயம்..." என்றவாறு வெளியே வந்தாள் தனம் அக்கா.

"இவன் றைவர் ராஜாராமை மரத்தோடை கட்டி வைச்சிருக்கிறாங்கள். எங்களுக்காய் வவுனியாவிலை இருந்து கொண்டு வந்த சாமானிலை தங்களுக்குத் தரேலை என்டு ராஜாராமைக் கட்டி வைச்சு அடிக்கிறாங்களாம். இன்னும் அவனை விடேலையாம்."


"மீனாட்சி! என்ன செய்யிறது? எல்லாம் எங்கடை தலைவிதி. பாம்புக்கு அம்ம நாங்கள்தானே பால் வார்த்தனாங்கள். அது இப்ப தன்ரை குணத்தைக் காட்டுது."

"இது இன்னும் எவளவு நாளைக்கெண்டு பாக்கத்தானே போறம்" என்று சினத்துடன் கூறினாள் சந்திகா.

அங்கிருந்து மீனாட்சி போன சற்று நேரத்திற்கெல்லாம் ராஜாராம் ஓடிவந்தான்.

"அம்மா கடவுளே!" என்று பெருமூச்சு விட்டவன், "அக்கா! இனிமேல் லொறியில் சாமான் கொண்டு வரவே பயமாயிருக்கிது. என்னைப் பயமுறுத்துறாங்கள். வரி கட்டியும் இவளவு பிரச்சனையாய் இருக்குது. என்னவோ உங்கடை துணையிருக்கும்வ

www.padippakam.com



ரையில் நான் சாமான் கொண்டரப் போய் வாறன்" என்று கூறியவன் தனம் அக்காவிடம் விடைபெற்றுக் கொண்டு தனது வீடு நோக்கிச் சென்றான்.

அன்று திங்கட்கிழமை---! காலை 10.30 மணியிருக்கும். வெளிநாட்டிலுள்ள தனம் அக்காவின் மகன் பாபுவின் கடிதம் வந்தது. ஒருமாத விடுமுறையில் அந்த ஊருக்கு, தான் பிறந்த மண்ணிற்கு வருவதாக எழுதியிருந்தான். ஒரு மாதமளவில் தங்கிவிட்டு, போகும்போது தனம் அக்காவையும் தர்சிகாவையும் கூட்டிக் கொண்டு போவதாகவும் எழுதி இருந்தான். எட்டு வருடங்களின் பின்னர் மகனைப் பார்க்கப் போகிறோம் என்ற சந்தோசத்தில் திளைத்தாள் தனம் அக்கா. தமையனின் வருகைக்காக ஆவலோடு நாட்களை எண்ணினாள் தர்சிகா.

பாபு வரப்போகும் செய்தி அவ்வூர் இளைஞர்களின் செவிகளுக்கு எட்டியது. பாபுவைச் சந்திக்கப் போகும் பொன்னான நாட்களை நினைத்தபடியிருந்தார்கள்.

ஆகஸ்ட் 23ம் திகதி வந்தது. கொழும்பிற்கு வந்த பாபு பலவித தடைகளைத் தாண்டி துன்பங்களின் மத்தியில் பிறந்த ஊருக்குள் கால் வைத்தான். அவனுடைய நினைவுகள் எங்கோ சென்றன. தெருவுக்குத் தெரு இருந்த வயிரவர் கோவில், கிட்டி புள்ளு விளையாடிய மணியத்தாற்றை வெளிவளவு, சனசமூக நிலையம், (தற்போது வேறு ஒன்றுள்ளது) முடக்கடி கடைகள்----?! எவற்றையுமே காணவில்லை. இந்த வீணான வன்முறையினால் எல்லாமே அழிஞ்சு போச்சே---

'வன்முறை--- வன்முறை--- இதெல்லாம் தேவைதானா?'



படிப்பகம்

www.padippakam.com

என்று நினைத்துப் பெருமூச்சுவிட்டான். எப்படியோ அந்த ஊரின் தெருக்களைத் தேடிச் சென்று, தனது தாயின் இருப்பிடத்தை அடைந்தான். தர்சிகாவும், தனம் அக்காவும் சந்தோசப்பட்டனர். அவ்வூர் மக்களின் சந்தோசத்திற்கும் அளவில்லை. இவ்வளவு நாட்களும் பாபுதானே அவர்களுக்கு உதவி செய்தான். அன்றைய இரவும் சந்தோசமான இரவாகவே கழிந்தது.

மறுநாள் காலையில் அண்ணனுக்காக அர்ச்சனை செய்வதற்காக அயலூரில் உள்ள பெருமாள் கோவிலுக்குப் போனாள் தர்சிகா. பல மணித்தியாலங்கள் கழிந்தும் தர்சிகா திரும்பி வராததால், அவளைத் தேடி கோவிலுக்குச் சென்ற பாபு, ஆயுதம் தரித்த இளைஞர்களால் இடைவழியில் தடுத்து நிறுத்தப்பட்டான்.

அவர்களுக்கும் பாபுவுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. பணம் கேட்ட இளைஞர்களிடம் பாபு சொன்னான், "உங்கள் ஆட்களுக்கு நானும் வெளிநாட்டில் மாதம் மாதம் பணம் கொடுக்கிறேன். அதுமட்டுமல்ல, அவசரகாலநிதி என்று கூடக் கொடுக்கிறேன். இப்ப என்ன பணம் தர வேண்டும்---?!" என்று.

"தம்பி, வெளிநாட்டில் கொடுப்பது பிரச்சனையல்ல. இங்கும் எமக்கு கட்டாயம் தர வேண்டும்---இல்லாவிட்டால் வெளிநாட்டில் இருந்ததற்காக மரண தண்டனைதான் கொடுப்போம்" என்றான் ஒருவன்.

வாக்குவாதம் உச்சநிலையை அடைந்தபோது, பாபு கட்டி வைத்துச் சுடப்பட்டான். அவனது உடலுக்கருகில் ஒரு வாசகமும் கிடந்தது. 'வெளிநாட்டில் சுகபோகங்களை அனுபவித்துவிட்டு வருவோருக்கு இதுவே தண்டனை' என்பதே அது. செய்தி கேட்டுப் பெற்ற மனம் துடிக்க, கண்கள் ஆறாக மரத்தடிக்கு ஓடிப்போய் மகனின் உடலைக் கண்ட கணத்தில் தனம் அக்காவின் உயிர் பிரிந்தது. இரு உடல்களைக் கண்ட தர்சிகா, அர்ச்சனைத் தட்டு கீழே விழ சிரித்தாள். துன்பங்களை வெளியிட அறியாது பைத்தியமாகச் சிரித்தாள். ஊர் ஊமையாகி அழுதது.



படிப்பகம்

www.padippakam.com

# இது எப்படி இருக்கு?

சினா - மூனா

- பத்திரிகை ஆசிரியர் வேலை பார்க்கும் ஒருவர், தற்போது ஆட்களுடன் டெலிபோன் பேசும்போது 'ரைக்கோட்' பண்ணுகிறாராம். பரவாயில்லை! பத்திரிகைத் தொழில்தான் ஏலாது என்று விட்டுவிட்டது. 'ரைக்கோடிங்' என்றாவதும் கை கொடுக்குமா என்று பார்க்கிறாரா?

- 12வது இலக்கியச் சந்திப்புச் செயற்குழுவிடம் ஒருவர், 'ஏன் இலக்கியச் சந்திப்பை வைக்கவில்லை?' என்று கேட்டதற்கு --- 'நீர் கருத்துத் திரட்டலுக்குக் கருத்துத் தெரிவிக்கவில்லை. உனக்கெல்லாம் இலக்கியச் சந்திப்பு ஒரு கேடா? வையடா டெலிபோனை' என்று பதில் வந்ததாம்.

- ERKELENZ ல் இடது கையில் 'ஒப்பரேசன்' செய்யப் போனவருக்கு வலது கையில் 'ஒப்பரேசன்' நடந்ததாம். 'டொல்மேச்சரின்' கோளாறால் வழக்குப் போட முடியவில்லையாம்.

- பட்டதாரி என்று தனது மனைவியை அறிமுகம் செய்தாராம் அச்சணனின் பேர்வழி. மனைவிக்கு படிப்பிக்க 'சான்ஸ்' கிடைத்துவிட்டது. விழாக் கட்டுரை ஒன்றில் மனைவியின் பெயரோடு 'பீ.ஏ' போட்டபோது பொங்கி எழுந்தாராம் கணவர். போடவே விடவில்லை!
 பட்டத்தைப் பறக்க விடலாம்! போட விடலாமா?

- கலியாண வீடொன்றில் மாப்பிள்ளையா பொம்பிள்ளையா முதலில் மணவறைக்குப் போவது என்று பிரச்சனை வந்துவிட்டது. ஐம்பது வயதுப் பெரியவர் ஒருவர், 'வீடியோக்காரத் தம்பிதான் கன கலியாண வீட்டுக்குப் போயிருப்பார். அவருக்குத்தான் விசயம் தெரியும்' என்றார். வீடியோத் தம்பியும் ஜமாய்த்துத் தள்ளிவிட்டார் (தனக்கு வசதியாக).
 வாழ்க வீடியோத்தம்பிகள்!

- KÖLN நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட குடும்பம் ஒன்று வீடியோக் கொப்பி, படங்கள் --- அது இது என்று ஆதாரங்களுடன் வந்தது. தங்களுக்கு 'அவ்வெண்தால்ற் எலவ்னிஸ்' தரும்படி வாதாடியது. அதற்கு நீதிபதி, 'நீங்கள் பிரச்சனை காரணமாக வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது' என்றாராம். 'இல்லை அவ்வெண்தால்ற் எலெவ்னிஸ்தான் வேண்டும்' என்றது தமிழ்க் குடும்பம்.
 'உங்கள் பகுதி அவுஸ்லாண்டராம்ற்றில் போய் கேளுங்கோ' என்று நீதிபதி சொல்லி அனுப்பிவிட்டார்.

- முகத்தில் முக்காடு போட வைத்த வேலை செய்த பொதுவுடமைக்காரர் இப்ப ஜேர்மன்காரி மூலம் முக்காட்டைக் கழற்ற முயற்சி செய்கிறாராம்.
 அனுபவித்தவர்களால் அமர்ந்திருக்க முடியுமா?
 புதுமொழி புறப்பட்டுவிட்டது.



படிப்பகம்

- கை கோர்த்த படம் போட்ட பலனோ தெரியவில்லை. – – – னில் விட்டுக் கொடுக்கவில்லையாம். கல்வீச் சண்டையாம்.
 'இணைந்த கரங்கள் இணையாத மனங்கள் பாகம் இரண்டோ' என்று சலித்துக் கொள்கிறார் இப்ப இயக்கமாற்று இணைத்து விட்டவர்.

- சில சந்திப்புக்களின் அறிவிப்புகள் அந்த இடங்களுக்கே எட்டுவதில்லையாம். அப்படி என்றால் தானாம் கணக்கை இலகுவாக முடித்துவிடலாமாம். அறிவிப்புகளை சந்தாவிற்குக் குறைக்கலாமோ, அந்தளவு பகிரங்கத்திற்கு கணக்கையும் கொண்டு வந்துவிடலாம் என்று நேர்மையாக நடத்தியவர் பற்றிச் சொல்கிறார்கள்.

- 'சிறு' சஞ்சிகை நடத்துபவருக்கு இப்ப பெரு மகிழ்ச்சியாம். கூடிய பிரதிகள் மட்டுமல்லவாம்; வாசகர் கடிதங்களும் குவிகின்றனவாம். ஆதரவு தேடிச் சென்ற இடமெல்லாம் பெரும் வரவேற்பாம். ஓரிடத்தில்--- 'வீட்டுக்குள்ளிருந்து எழுதுவதுடன் மக்களையும் நேரில் சந்திக்க தன் ஒருவனால்தான் முடியும்' என்றாராம்.
 மற்றவர்கள் சந்திக்க முடியாவிட்டாலும் சிந்தித்தால் நல்லது.

- DORTMUNDற்கு கிட்ட 13 வயதுச் சிறுமி ஒருவர் காலை 7 மணிக்குப் புறப்பட்டு இரவு 12 மணிக்கே வீட்டுக்கு வருவாராம். வீட்டில் ஏதாவது கேட்டால், 'யுங்கண்டாமிற்கு அடிப்பேன் அல்லது பொலிசுக்கு அடிப்பேன்' என்கிறாராம்.
 'பெற்றோருக்கு அடிக்கவில்லையே' என்று பெருமைப்படுகிறாராம். அப்பா.
 அப்பாடி !

- 'சாக்சனி'யில் நடந்ததைப்பற்றி உள்ளூர் சோதிடரிடம் கேட்டபோது சாக்–சனியில் தொடங்கியிருக்கிறது என்றாராம்.

- சஞ்சிகை ஆசிரியர் ஒருவர் தனக்கு ஏற்பட்டதைச் சொல்லி அழுகிறார். தான் போன வீடொன்றில், 'முற்போக்கு வந்து முடிஞ்சுது. நீங்கள் என்ன பிற்போக்கா ?' என்று ஒருவர் கேட்டாராம். முற்போக்கு என்பது பத்திரிகை நடந்த முன்னரே காசு சேர்ப்பவர். பிற்போக்கு என்பவர் பத்திரிகை தொடங்கிய பின்னர் போகிறவராம்.
 முற்போக்குக்கு இதைவிட வேறு விளக்கம் தேவையே இல்லை!

- ஸ்டெபி கிராவின் அப்பாவின் விவகாரம் தெரியும்தானே ! மொனிக்கா செலஸின் அப்பாவும் அதே 'கேஸ்'தானாம்.

- முன்பு சண்டை பிடிக்கும் போது இத்தனை ஆயிரம் மார்க், இத்தனை பவுண் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். இப்போ அது பழசாய்ப் போச்சுதாம்.
 "எனக்கு இரண்டு வருட விசா, நாய்க்கு ஆறுமாத விசா. என்னோடு நிமிர்ந்து கதைக்கப் பார்க்குதாம்". இதுதான் இப்ப 'லேட்டஸ்ற்'.
 ஜனவரியில் எதுவோ ? என்னவோ ?!

- 'நமது குரல்' வளையை நசுக்கிவிட்டார்களாம் குரல் வளைக்காகக் குழறுபவர்கள் என்று ஆத்திரப்படுகிறார் குரலை இழந்தவர் ஒருவர்.

● ● ● ● ●

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 5

தொகுப்பு: விமலா பரீஸ்கந்தராசா,
5090 LEVERKUSEN-3.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 க் | 3 | 4 | | 6 |
| 7 | | | | 11 | |
| 13 | 14 | | | | |
| 19 ம | | 21 | | 23 | 24 |
| | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | | | 35 | 36 |
| 37 | | | | | 42 |
| 43 | 44 | 45 | | 47 | 48 |

முடிவு திகதி: 20-10-1991
சரியாக விடை அனுப்பும் அதிர்ஷ்ட
சாலி ஒருவருக்கு ஒரு நூல் அன்ப
ளிப்பாக வழங்கப்படும்.

இடமிருந்து வலமாக :

1→6 பரீட்சையின் பெறுபேற்றை விட இப்பேறு முதன்மை பெறும்.
7↔11 பிடிவாதம் பிடிக்கிறான் என்பதை 'இது' கட்டிக் கொண்டு நிற்கிறான் என்பார்கள். குழம்பியுள்ளது.
13←14 காடுகளில் வேடர்கள் இதில் வாழ்ந்தார்களாம். வல இடமாக மாறியுள்ளது.
19↔24 ஒரு இலைப் பெயர். கிருஸ்ணருடன் சம்பந்தப்பட்டது. குழம்பியுள்ளது.
26→28 ஒரு ஆணின் பெயர் அழகானவன் எனவும் பொருள் தரும்.
29←30 ஆடை நெய்யப் பயன்படுவது புத்தகம் எனவும் பொருள் தரு வது வல இடமாக உள்ளது.
31↔36 துபசிகளின் கைப்பொருள். இறுதி இரு எழுத்து மாறியுள்ளது.
37↔42 பண்டைய கலைகளில் ஒன்றான இது இன்றும் உள்ளது. இங்கு குழம்பியுள்ளது.
43→48 நந்தனார் போக விரும்பிய இடம். ஒரு சிவத்தலம்.

மேலிருந்து கீழாக

1→43 பாண்டிய அரசி. '______ வளவர்கோன் பாவை---' என்றொரு தேவாரம் கூட உண்டு.
2↔26 இதன் விதையிலிருந்து சுகாதார பயன், எண்ணெய் கிடைக்கிறது. குழம்பியுள்ளது.
3→21 ஆள்தாண பதவியைத் தூக்கி எறிந்த கவியரசர்.
4↔28 குருடர், செவிடர், ஊமையை இது இழந்தோர் என்பர். குழம்பி---
6↔24 குழந்தைகள் செய்வது இரசிக்கக் கூடியது. குழம்பியுள்ளது)
11→23 பனை மட்டையை 'இந்த' மட்டை என்றும் கூறுவர்.
27→45 அடாது செய்தவர்கள் அகப்பட்டால் பெறும் பரிசு?
30→48 அறிவைப் பெருக்க அனைத்து வயதினர்க்கும் உபயோகமாகும் இடம்.
32↔44 வசதிக்காக பலர் இது மாறுவதால் இங்கு குழம்பிவிட்டது.
35↔47 அமிலத்தை நடுநிலையாக்கும் பொருள் — குழம்பியுள்ளது.

www.padippakam.com

# கேள்வி பதில்

## திருவாளர் புத்திஜீவி

● அன்ரனி யோகராஜா, 4018 LANGENFELD

? மகாத்மா காந்தி ஒரு தத்துவ ஞானியா?

காந்தியிடம் தத்துவமும் இல்லை; ஞானமும் இல்லை. ஆன்மீக பலம்தான் இருந்தது. அதுதான் அவரை 'மகாத்மா' ஆக்கியது.

● அ. விநோத், 4000 DÜSSELDORF.

? இலக்கியச் சந்திப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உங்களுக்கு கருத்துத் திரட்டல் படிவம் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

? HOLZWERDEவில் நடந்தது தொடருமா? Munster, Hamburg, Osnabruck, Bayern, --- என்று நீளுவது தெரியவில்லையா?! [கேட்கவில்லையா?]

● ச. ஸ்ரீரங்கன், 2800 BREMEN.

? கடலில் 'கிசுகிசு' தேவைதானா? 'கிசுகிசு' பண்ணினால்தான் சிரிப்போம் என்று வாசகர்கள் பிடிவாதம் பிடித்தால், கடலால் வேறு என்னதான் செய்ய முடியும்.

? இங்குள்ள பல சஞ்சிகைகள் 'புலி'யை எதிர்த்து எழுதுகின்றனவே. இது நல்லதா?

புலியை எதிர்ப்பது என்று சொல்லிக் கொண்டு இந்தியாவிற்கு ஆதரவாக எழுதுவதுதான் 'டேஞ்சர்' (Danger) உள்ளது. புலியை எதிர்த்து எழுதுவது இங்கு 'பாஷன்' (Fashion) என்று நினைக்கிறார்கள்.

'பாஷன்' அல்ல 'பய்சன்' (Poison) என்கிறார் 'பொட்டு'க்காரர்.

● S. ரஜீந்தன், 3342 HORNBURG.

? வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் நாட்டிற்கு என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்?


இயக்கத்தை விட்டு விட்டாலும், இயக்கமற்றுள்ள அநாதைகளை, அகதியானவர்களை ஆதரித்து உதவ வேண்டும். இரண்டும் இல்லை என்றால் சந்திப்புக்களில் அமாய்க்கலாம்.



டொக்டர்: முதலாவது ஊசி வலிக்கும். இரண்டாவது ஊசி வலிக்காது --

நோயாளி: அப்படியென்டா இரண்டாவது ஊசியை போடுங்கோவன்.

-"ஆனந்திசாந்தி"-



தொழிலாளி: ஐயா, மழை பெய்வதால் பூக்கன்றுகளுக்கு நீர் ஊற்ற முடியவில்லை.

முதலாளி: ஏன்... குடையைப் பிடிச்சுக் கொண்டு ஊற்றுவதுதானே?!

-"ஆனந்திசாந்தி"-



படிப்பகம்

www.padippakam.com

# அதிமேதாவியின் அவசரக்குறிப்புகள்

– (இ)ராமசாமி –

இந்த அந்நிய தேசத்தில் ஒரு விமரிசையான பிறந்தநாள் வைபவம். நானும் போயிருந்தேன். தூரத்திலிருந்து வந்த இசைக்குழு ஒன்று, மேடைமீது மிகவும் அறிமுகமான தமிழ் சினிமாப் பாடல்களைப் பாடுவதற்காக இணந்தெரியாத நவீன இசைக்கருவிகளுடன் கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தது. "தம்பி நீங்கள் சிலோனில் எந்த இடம்?" எனக் கேட்பவர்களும்; "வேலை செய்கிறீரா? என்ன அசுட்டோ?" என அங்கலாய்ப்பவர்களும்; "மரி பண்ணிவிட்டீரா?" பிள்ளைகள் எத்தனை" எனக் கணக்கெடுப்பவர்களும்; 'டெல்டுங்கா ஸ்ரட்டா?' என அறிய விரும்புவர்களும்; கஸ்டப்பட்டுக் கொண்டிருந்த இசையை முழுமையாகக் கேட்க விடாமல் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். எதையுமே கிரகிக்க முடியாத நிலையில் அந்த ஒரு வயது மழலை தாயின் கைக்குள் தன்பாட்டில் முழித்திருந்தது. இன்னும் கொஞ்சம் என் கண்களையும் காதுகளையும் பரப்புகின்றேன். 'அனை விறவு இப்ப தோல்விதான். எண்டாலும் பொடியள் விடமாட்டாங்கள். திரும்பவும் அடிப்பாங்கள் - - - - -' இப்படியாக உலகத் தமிழர்கள் சிலர் கதைத்துக் கொண்டார்கள்.

தற்காலிகமாக அந்த அருவை இசை நிறுத்தப்படுகிறது. கப்பல்போல் செய்யப்பட்ட 300 மார்க் கேக் வெட்டப்படுகிறது. உண்ண முடியாத மழலையின் வாய்க்கருகில் சிறு துண்டு கேக்குகளைக் கொண்டு சென்று, போஸ் கொடுத்து, கமராவையோ அல்லது வொட்டலத்தையோ பரிசளிப்பதற்கு அனைவரும் அணியாகின்றனர். மிக்ஸர், வைத்திருக்கும் அந்தப் பேர்



படிப்பகம்

போன வீடியோக்களும், தனது பேருக்கு இன்னும் சிறப்புக்கள் சேர்ப்பதற்கு ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருந்தார். காஞ்சிபுரங்களும், 24 கரட்டுகளும் தங்கள் பாட்டிற்கு கிசுகிசுக்களுடன். எதையுமே கிரகிக்க முடியாத நிலையில் அந்த ஒரு வயது மழலை தாயின் கைக்குள் தொடர்ந்தும் தன் பாட்டில்.

விஸ்கிகள், பியர்கள், வீடியோக் கமரா இணைந்த இந்த அமளிதுமளியில் எனக்கருகில் இருந்தவர் அலுத்துக் கொண்டார். "பார்த்தீரா ராமசாமி, அங்க நாட்டில சனங்கள் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் பட்டினியால சாகுதுகள். இங்க இருக்கிறதுகளோ கொண்டாட்டம் எண்டு சாகுதுகள். உண்மையில யாருக்காவது நாட்டில எஞ்சியுள்ள சனத்தைப்பற்றிய அக்கறை இருக்கா. அதுதான் இல்லாவிட்டாலும், அந்த சனத்தின்ரை நிலைமை பற்றிய ஒரு கவலை தோய்ந்த உரையாடல் ----- சே! என்ன மனிதர்கள் இவர்கள்".

உண்மைதான். நாட்டின் இன்றைய நிலைமைக்கு இங்கிருக்கின்ற எம்மால் ஏதாவதொரு தீர்வு வைக்கப்படலாம். ஆனால் நடைமுறையில் எதுவுமே செய்ய முடியாத அவலங்கள். அதற்காக அங்கே யுத்தத்திற்கும், துயரத்திற்கும் மத்தியில் சிக்கித் தவிக்கும் மக்களைப்பற்றிய எந்தவித சிந்தனைகளும் இல்லாமல் இருப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. அலை 5 இன் குறிப்புகளில், "தமிழீழம் கிடைக்காமல் சாப்பிட மாட்டோம் என எவரும் இங்கே பட்டினி கிடக்கவில்லை" என எழுதியிருந்தேன். இதற்கு அர்த்தம் பட்டினி கிடக்க வேண்டுமென்று அல்ல. நாட்டைப் பற்றிய பார்வைகளுக்கு முற்று வைத்து, இந்த அந்நிய தேசத்தின், வாழ்வின் சிறப்புகளையும் வசதிகளையும் நோக்கிய முற்றுப் பெறாத ஆவல் ஓட்டத்தில் கலந்து கொண்டுள்ள எம்மவரின் இயல்புகளை அறிந்து கொண்டதனால் எழுந்த பாதிப்புதான் அந்த வரிகள்.

அதற்காக பிறந்த நாளோ, திருமணநாளோ சிறப்பாகக் கொண்டாட வேண்டாமென்று அ

www.padippakam.com

ல்ல. ஆனால் சில அவசியமற்ற செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் இப்படியான கொண்டாட்டங்கள்தான் நம்மவர்களை ஒரே இடத்தில் சந்திக்க வைக்கின்ற சந்தர்ப்பங்கள். இந்த சந்தர்ப்பங்களினால் நம்மவர் குடும்பங்களுக்கிடையே அப்படியொரு ஒற்றுமை ஏற்பட்டு, சில பல சச்சரவுகள் தவிர்க்கப்படுகிறதோ இல்லையோ, தனித்தனியே இருக்கின்ற தமிழ்க் குழந்தைகள் கொஞ்ச நேரம் தாய் மொழியில் கதைத்து விளையாடி மகிழ இவை உதவி செய்கின்றன.

எல்லோரும் வாழ ஆசைப்படுகிறார்கள். இன, மத பேதங்களுக்கு அப்பாலும் இந்த விருப்பு விரிந்து கிடக்கிறது. இலங்கைக்கு வெளியில் வாழ்கின்ற தமிழர்களெல்லாம், அந்தந்த நாடுகளிலேயே இருக்கத்தான் முயற்சி செய்கிறார்கள். காரணம் ---- வாழவேண்டும் என்ற ஆசைதான்.

ஆனால் இலங்கையில் இருக்கும் மக்களின் நிலை அதுவல்ல. அவர்கள் எதையுமே பெரிதாக நினைக்கவில்லை; மரணத்தைக் கூட. மிகவும் ஏழ்மையில், வேள்விக்கு பிள்ளை கொடுப்பதற்கும், பங்கர் வெட்டுவதற்கும், எரிந்து சாவதற்கும் உரித்துடையவர்களாக மௌனமாக்கப்பட்ட நிலையில். இங்கே இருப்பவர்களும் மனிதர்கள் தான். இதுவரையும் இல்லாவிட்டாலும் எங்கிருந்தாவது அந்த மனிதாபிமானத்தை வரவழைக்க வேண்டும். வீண் வேடிக்கைகளைத் தவிர்த்து, ஆகக் குறைந்தது ---- நாட்டின் **உண்மை** நிகழ்வுகளையாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

■ ■ ■ ■

அந்த வீட்டிற்கு நான் அடிக்கடி போகின்றவன். பத்துப்பேருக்கு மேல் அடைபட்ட ஒரு வாழ்வு. இந்த அகதி அந்தஸ்தில் திருமணமும் செய்ய வாய்ப்பில்லாமல் வயதும் கூடி, தலை மயிரும் கோபித்து வெளியாக்க, எதிர்காலம் எப்படியிருக்கும் என கனவு கூடக் காண முடியாத சோகங்கள். அவர்கள் எனது



படிப்பகம்

www.padippakam.com

நண்பர்கள் கூட.

தீபாவளி, புதுவருடம் என்றும் இன்னும் பல காரணங்கள் சொல்லியும் பார்ட்டி வைப்பார்கள். நானும் கலந்து கொள்வேன். 304 உம், ரம்மியும், கஞ்சாவையும், கரம்போட்டுமாக பல இரவுகள். நாட்டு நிலைமையை; இயக்கங்கள், இராணுவம் செய்கின்ற கொலைகளை; ஒரு மக்கள் விடுதலைப் போராட்டத்தை; ---- எல்லாம் எங்கள் பாணியில் அத்தி பூக்காமற் கதைத்துக் கொள்வோம். பூமாவையும், புதிதாய் வருகின்ற படங்களையும், கவுண்டமணியின் நகைச்சுவையும் கூட பொழுதைப் போக்க உதவுவதுண்டு. காலங்காலமாக மடமைகளில் மூழ்கிப் போன எமது சமூகத்தை, அதற்குள் அடிபட்டுப்போய் நிற்கின்ற பெண்களின் உணர்வுகளை, சீதனத்தை ------ இப்படியாக தேடிப்போய் சில விடயங்களைக் கதைத்து உடைத்துக் கொள்வோம்.

கிராண்ட் சிலாம், 'ஸ்ரெவி'யின் நீக்கு, தனை முடியைத் தியாகம் செய்த 'மொனிக்கா', 'இவானி'ன் வீழ்ச்சி, 'மரடோனா'விற்கும் கொக்கேயினுக்குமுள்ள தொடர்பு, யூகோவில் தேசிய இனங்களுக்கிடையே நிகழும் வக்கிரமான போர், சோவியத் யூனியனின் வறுமை, புதிய நாஜிகளின் வளர்ச்சி, ---- இவையெல்லாவற்றையும் சம்பாராக்கி எங்கள், எங்கள் திறமைகளில் திளைத்துக் கொள்வோம். இன்னும் எத்தனையோ விடயங்கள், விமர்சனங்கள். தீர்வுகளும் கூட.

எவ்வளவு காலந்தான் இப்படியே இருப்பது. என்ன வாழ்க்கையிது; --- சிலர் வெளிப்படையாகவே அலுத்துக் கொண்டார்கள். இப்படி அலுத்துக் கொண்டவர்களில் ஒருவர், வீட்டாருக்கு கடிதம் எழுதினார். அவசரப்பட வேண்டாம்; அழகும், குணமும், அடக்கமும் சேர்ந்த குடும்பத்துக்குரிய பெண்ணாக அனுப்புகிறோம் எனப் பதில் வந்தது. யாழ்ப்பாணத்து வெள்ளை வேட்டிகள் இப்படித்தான், இந்த திருமண விடயங்களில் வேட்டி வைப்பார்கள். ஆனால், நண்பருக்கு இந்தப் பதில் தேவை


படிப்பகம்

யாக இருக்கவில்லை. வீட்டாருக்கு தெரியாமல் அவராகவே ஒரு பெண்ணை இலங்கையிலிருந்து தனது செலவில் கூப்பிட்டு விட்டார்.

பெண் இங்கு வந்ததும், அவரைத் தெரிந்த ஊர்க்காரர்கள் சொன்னார்கள்; அவரின்ரை குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. எப்படியும் குடும்பத்துக்கு ஏற்ற பெண்தானென்று. எவரும், எங்கேயும் குடும்பத்துக்கு ஏற்ற ஆண் என்ற பதத்தை ஒரு தடவையாவது உச்சரிக்கிறார்களோ! என்னவோ!!

நாங்களும் நண்பரைப் பாராட்டினோம். திருமணமும் நடந்தது. உண்மையில் இது ஒரு வித்தியாசமான சம்பவம்தான். நாட்கள் செல்ல, அவர்கள் தனியாக வீடு எடுத்து போய்விட்டார்கள். இதுவரையிலும் அவர்களுக்குள் எந்த வித பிரச்சனைகளும் எழுந்ததில்லை. இனிமேலும் தான்.

இந்த மண்ணில், மூலைக்கு மூலை நமது இளைஞர்கள் எல்லாம் கனவுகளைத் தேக்கி வைத்துக் கொண்டு, காலத்தை வீணடித்துக் கொள்கிறார்கள். சில பெற்றோர்கள், மகன் பணம் அனுப்பினால்மட்டும் போதும் என்றளவில், மற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தட்டிக் கழிப்பதாகக் கூட தெரிகிறது. இந்த ஆண் ஆதிக்க ஏகேத்திற்குள் காலங்காலமாக முடங்கிப்போன நமது இளைஞர்களுக்குள்ளும் பெண்களைப் பற்றிய புரிந்துணர்வான பார்வைகள் கூட சொற்பம்தான். பலர், தங்களுக்கு அழகான, வசதியான பெண்கள்தான் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் ---- இப்படியே போனால் மிஞ்சப் போவது வயது ஒன்றுதான்.

அதனால், இந்த திருமண விடயத்திலாவது சில அடிப்படைகளை விட்டுக் கொடுப்பதனூடாகப் பல பெண்களுக்கு வாழ்வு கிடைக்க வழிகோலலாம்.

துயர் சூழ்ந்த ஈழ மண்ணில் வதைபடுகின்ற எவ்வளவோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் பக்கம் இந்த இளைஞர்களின் பார்வைகள் புரிந்துணர்வுடன் திரும்பினால், அதைவிட இந்த அகதி வாழ்வில் அர்த்தம்

www.padippakam.com

ஏது !

பல்வேறு தேசிய இனங்களையும், குடியரசுகளையும் கொண்டதுதான் யூகோஸ்லாவியா. டீட்டோ தலைமையிலான தேசிய விடுதலை இராணுவம் சோவியத் படைகளின் உதவியுடன் நாற்பத்தைந்துகளில் நாஜிகளைத் தோற்கடித்து இந்த கூட்டமைப்பை உருவாக்கியது. சோவியத் யூனியனும், அமெரிக்காவும் எதிர் எதிர் முகாம்களில் அணி திரட்டியபோது, அணிசேரா நாடுகள் என்ற உலகளாவிய அமைப்பொன்றை தோற்றுவித்ததில் யூகோஸ்லாவியாவினதும், டீட்டோவினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

யூகோஸ்லாவியா, தனது தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சனைகளுக்கு நல்ல ஒரு அரசியல் தீர்வு கண்டுள்ளது என உலகமே பாராட்டியது. இலங்கையின், தனிப்பெரும் தமிழ்த் தலைமைகள் கூட யூகோஸ்லாவியாவின் ஆட்சி முறையை உதாரணம் காட்டி, தமிழீழத்திலும் இதே முறைதான் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிக்கை விட்டுக் கொண்டன. ஆனால் அந்த ---- ஈழம் கிடைக்க முன்னமேயே சிங்கள, முஸ்லிம் மக்களை வேட்டையாடத் தொடங்கியதும்; இந்த ஆயுத முனைப்பு அறிக்கைகளிலே எந்தவித அர்த்தமும் இல்லை என்பதும்; உண்மை பேசும் தமிழ் உலகம் அறிந்து கொண்டவை. பலரின் பாராட்டுக்களுக்கும், உதாரணங்களுக்கும் ஒரு காலத்தில் இலக்கான யூகோஸ்லாவியா, இன்று உடையும் குடியரசுகளுடன் ஒரு கோரமான யுத்தத்திற்கு இலக்காகிப் போயுள்ளது.

இந்த யுத்தம் குடியரசுகளுக்கிடையோ; தேசிய இனங்களுக்கிடையே நிகழும் யுத்தம். சிறுபான்மை குரோசிய மக்களுக்கும், பெரும்பான்மை சேர்பிய மக்களுக்கிடையே நிகழும் யுத்தம். குண்டு வீச்சுகளுக்கும், பீரங்கித் தாக்குதல்களுக்கும் நடுவில் சிக்குண்டு கொல்லப்பட்டும், காயமடைந்தும் ஆயிரக்கணக்கில் அகதிகளாகவும் போன அப்பாவி மக்கள் ஒருபுறமும், இவற்றிற்கெல்லாம் காரணமான யூகோஸ்லாவிய

www.padippakam.com

அரசு யந்திரம் மறுபுறமும் இருக்க; காலங்காலமாக குளிர்காயும் மேற்குலகங்கள் இங்கேயும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.

யூகோஸ்லாவியாவில் பல்வேறு தேசிய இனங்கள். இவற்றிற்கிடையேயான முரண்பாடுகளும், போராட்டங்களும் பல வருட தாற்பரியம் மிக்கவை. இருந்தும், இந்த வருடத்தில்தான் யுத்தமாக வெடித்துள்ளது. எங்கள் நாட்டைப் போல இங்கேயும் பெரும்பான்மையான சேர்பியர்கள்தான் ஆட்சி இருக்கைகளில். அடுத்ததாக குரோசியர்களும், இன்னும் பல இனக் குழுக்களும், மதச் சிறுபான்மையான முஸ்லிம்களும் உள்ளனர். பொருளாதாரத் தேக்க நிலைகளால் அந்நிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் திறந்த வலயத் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியது. அமையப் பெற்ற வெளிநாட்டு நிறுவனங்களினதும், அரசினதும் சுரண்டல்களின் விளைவான வேலையில்லாத் திண்டாட்டமும், உயர்ந்து செல்லும் விலைவாசியும் மக்களில் தாக்கங்களை ஏற்படுத்தியது. அதோடு, பெரும்பான்மை சேர்பிய இனத்தின் குடியரசுகள் மீதான ஆதிக்கமும்; சோவியத்தில் பால்டிக் குடியரசுகளின் தனிநாட்டுக் கோரிக்கைகளும்; அந்த தாக்கங்களுக்கு அழுத்த வடிவம் கொடுத்தது.

அந்த வடிவம்தான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் குடியரசுகளின் பிரிவினைக்கான போராட்டம். குரோசிய குடியரசுக்கெதிரான போராட்டமே முதன்மையாகப் பேசப்பட்டாலும், ஏனைய குடியரசுகளும் பிரிந்து செல்வதற்கான முனைப்பிலேயே இருக்கின்றன. மேலும், இக் குடியரசுகளின் மக்களும், ஆயுதக் குழுக்களும் மேற்குலகங்களின் உதவியை எதிர்பார்த்தே நிற்கின்றனர். குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகமானது; பிரிந்து வாருங்கள், இந்த சமூகத்திற்குள் ஒரு நாடாக உங்களை அங்கீகரிக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு ஆயுதங்களை பிச்சையாகப் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வல்ல அரசுகளின் உதவி பெற்று ஒடுக்கப்படுகின்ற மக்கள் எங்கேனும்



படிப்பகம்

சுதந்திரமாக, சந்தோசமாக வாழ்ந்திருக்கிறார்களா? ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், எதியோப்பியா, குர்திஸ் மக்கள் ---- இன்னும் உதாரணத்திற்கு எத்தனையோ தேசங்கள், தேசிய இனங்கள் இருக்கின்றன. ஏன்! தமிழ்த் தேசிய இனமான நாங்களும்தான்.

ஆனால், தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து செல்வதற்கான கோரிக்கையின் அடித்தளம் எந்த வித உண்மையையும் கொண்டிருக்கவில்லை. தமிழ் அப்புக்காத்துகள் தங்கள் பாராளுமன்ற பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காகச் சொன்னதுதான் இந்த தமிழீழமென்ற கோஷம். ஆரம்பம் பிழையாக இருந்தாலும், பின்பு சுடுபவர்கள் தவறுகள் செய்தாலும், இன்றைய அவலங்களுக்கு ஒரு தீர்வு தேவை. அது தமிழீழமாக அமையாவிட்டாலும் கூட.

விடுதலைக்காக போராடுபவர்கள் எல்லோரும் மக்களில் நம்பிக்கை வைத்து, அவர்களின் பின்னணியில் நிற்பார்களேயானால் அந்தப் போராட்டம் வலிமையானது. மேலும், விடுதலை அவசியமானது; அதுவே எமது வாழ்வு என்ற நினைப்பு மக்களுக்குள் தொடர்ந்து இருக்குமட்டுமே அது சாத்தியமானதும் கூட.

■ ■ ■ ■

சமூகத்தினால், மிகவும் கவரப்பட்ட பொருளாக, அடிக்கடி பேசப்படும் பொருளாக சினிமாவானது தொன்று தொட்டே இருந்து வருகிறது. வண்ணக் கனவுகளை விதைக்கின்ற இந்த சினிமாவானது சமூகத்திற்குள் பாதிப்புகளைக் கூட ஏற்படுத்தும் வல்லமை பொருந்தியது. அவசரக் குறிப்புகள் என்ற இந்தக் கிறுக்கல்களிலும் சினிமா சமாச்சாரங்களையும் தவறாமல் தொடர்வது, அது சம்பந்தமான ஒருவித ஈடுபாடுதான். ஆனால் இது மட்டுப்படுத்தப்பட்டது.

கலை என்பார்கள். இன்னும் ---- கலாச்சாரம் அது, இது என பலவிதமான கருத்துக்களை இடம் பார்த்துத் தெளித்துக் கொள்வார்கள். சினிமா என்றவுடன் விழுந்து, விழுந்து பார்க்கும் தகமைகள் பல பக்கங்

www.padippakam.com

களிலும் இருக்கின்றன. இதைத் தவறென்று சொல்லவில்லை. ஆனால், முன்பரில் சித்ராவின் மழலைத் தமிழையும், அமரனின் அறுவையையும் கேட்கப் போனவர்கள் எத்தனை பேர்? சேவை செய்ய வருகின்ற நடிக, நடிகைகளின் அருகில் நின்று போட்டோ பிடித்து மகிழ்ந்தவர்கள் யார்? யார்?! சொந்த நாட்டிலே உற்றவரும், சுற்றத்தவர்களும், கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியில் பட்டினியுடன் காய்ந்து போயிருக்க, இந்த நட்சத்திரங்களுக்கு அன்பு அளிப்பு செய்பவர்களும்; நாட்டிலே நின்று போராடுகின்றவர்களுக்காக இந்தப் போலிக் கலைஞர்களை வரவழைத்து அதன் மூலம் பணம் திரட்டி அனுப்புவதாக பாசாங்கு செய்பவர்களும்; யார்? யார்?!

இவற்றை ஆராய வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் இவை; கலை, கலாச்சாரத்தை விரும்புகின்ற ஈழத் தமிழர்கள் இந்த மேற்குலகங்களில் அகதிகளாக இருக்குமட்டும் கலை வளர்ப்பு என்ற போர்வையில் தொடரப்போகின்றவைதான். நவம்பரில் சித்ரா, ரம்யா; டிசெம்பரில் இன்னும் சில (புது) முகங்கள்.... இப்படி, பாரிசையும், ஸ்கன்டினேவியாவையும், சுவிஸ், லண்டன், ஜேர்மனியையும் கலக்க வரப்போகின்றார்கள்தான்.

உண்மையில் தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்கள் என்ன? அண்மையில், ஒரு வீடியோ கசெற்றைப் பார்த்தேன். இங்கே, ஜேர்மன் நகரம் ஒன்றிலே இந்த வருடம் நடந்த கலைவிழா ஒன்று அந்த கசெற்றில் இருந்தது. முதலாவது நிகழ்ச்சியாக, இரு சிறுவர்கள் ஓர்கனில் சினிமாப் பாடல்களை இசைத்தார்கள். தொடர்ந்து சிறுமிகளின் பயிற்றுவிக்கப்படாத ஒரு பரதம். சினிமா நடிகர்களின் குரலில் ஒருவர் திளைக்க, மீண்டும் ஓர்கன் இசை. இளைஞர் ஒருவரின் பிரேக் டான்ஸ். ஓர் இசைக் குழுவின் சினிமாப் பாடல்கள். தொடர்ந்து நாடகமொன்று. இங்கே வாழ்கின்ற நம் தமிழ்க் குடும்பங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு தரங்கெட்



படிப்பகம்

ட தயாரிப்பு. குடும்ப பெண்கள் சோரம் போவது பற்றியும், இன்னும் பலவித கிசு, கிசு பார்வைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட ஒரு நாடகம் என்று சொல்லப்பட்ட கேலிக் கூத்து. சபையிலிருந்தவர்களும் கைதட்டி ஆரவாரித்தனர். இறுதியாக 'லம்பாடா' பாடல். அந்த இரு சிறுவர்களால் இசைக்கப்பட்டது. பலர் ஆடினார்கள். ஆட்டமுடிவில், இந்த கலைவிழாவின் அமைப்பாளர் தமிழில் நன்றி கூறிக் கொண்டார். எங்களுடைய பாரம்பரிய கலைகளை எப்படிக் கொலை செய்யலாம் என்பதுபற்றி அந்த அமைப்பாளர் சொல்ல மறந்ததுதான் பெருங்குறை.

நாட்டுக்கூத்து, பரத நாட்டியம், காவடி கரக ஆட்டங்கள், தவில் நாதஸ்வர இசை, அகதிகளாகி நாமிங்கே அடைபட்டு வாழ்வதற்கான காரணங்களை உள்ளடக்கும் ஒரு (மௌன) நாடகம், கருத்துள்ள ஓர் பட்டி மன்றம், கவியரங்கு ---- இப்படிப் பல அம்சங்கள் இருக்கின்றன. Rap உம் பிரேக்கும், காலங்காலமாகப் பாடமாக்குகின்ற சினிமாப் பாடல்களும், லம்பாடாவும் எங்கள் கலையல்ல. இந்த நாட்டிலே இன்னும் சில வருடங்கள் வாழலாம் என்ற நம்பிக்கை யாருக்காவது இருக்குமானால், சிலம்படிகளைப் பழகி கலைவிழாக்கள் செய்யும்போது கொலைகள் விழாமல் பார்த்துக் கொள்வது பிரயோசனமானது. ●



## எண்ணம்

தொலைந்துபோன, யூதக் குடி வாரணை அண்மைக் காலங்களில் புதிய நாசிகளால், பக்கபலமாக தொலைக்காட்சி, பத்திரிகை துணையோடு பரவ ஆரம்பித்துவிட்டது. இவற்றின் இடையே தொடர்ந்தும் இங்கே உயிரைப் பவித்திரமாக்கப் பாடுபடுவதிலும், நாடு திரும்பிதலுக்கான சாதக நிகழ்வுகளை தாயகத்தில் நிலைநிறுத்துவதற்கான வழிகளைக் காண முனைதலே சிறந்த வழியாகும்.

ஆனால் சில முன்னெடுப்புகளில் கூட விட்டுக்கொடாமை இங்கு வெளிவரும் சஞ்சிகையாளர்களிடையே எழும்போது மக்களிடையே இந்த புரிந்துணர்வுகளால் புதுவழி உதிப்பது எங்ஙனம்?!

சந்திப்புகள் பல முக தரிசனங்களுக்கு உதவினாலும் அவை கூட சிலவேளைகளில் வெளிநாட்டவர் துவேசத்தை கிளறிவிடுமோ என எண்ண வேண்டியுள்ளது.

---

சென்ற அலை மழலைப்பட்டாள அறிவிப்பில் 'சுழியோடிகள்' என்பதற்கு பதிலாக 'கடலோடிகள்' என தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

குறுக்கெழுத்துப்போட்டி (5) முடிவுகள் அடுத்த அலையில் இடம்பெறும்.

www.padippakam.com

# கேட்டுப்பாருங்கோ எம்மெஸ்

● நாங்கள் தகுதியான எதிரிகளுடனேயே மோதினோம். பலம் மிக்க படைகளுடனேயே எமது படையினர் மோதவேண்டி இருக்கிறது.

– ஆனையிறவு தாக்குதல் பற்றி பிரிகேடியர்.

ஏதோ உங்களுக்குத்தானே அவர்களின் பலம் தெரியும்.

– மகரகமையில்---- அத்துலத்முதலி.

● இது ஒரு குடியேற்ற நாடல்ல. அமெரிக்காவில் நீங்கள் வாழலாம்; நீங்கள் கலாச்சாரத்தையும் வளர்க்கலாம். ஆனால் இது ஜேர்மனியர்கள் மட்டும் வாழும் நாடு. இங்கே வாழ்கின்ற எமக்குள் ஓடுவது ஜேர்மனிய இரத்தம். துருக்கிக்காரனும், ஆபிரிக்கனும், ஆசியனும் இங்கே வந்து எமது நாட்டைக் குப்பையாக்கவும்; தங்கள் தங்கள் கலாச்சாரங்களைப் புகுத்திச் சீரழிக்கவும் நாம் இனிமேலும் அனுமதிக்கப் போவதில்லை. ஜேர்மனியர் தவிர்ந்த அனைவரும் இந்த நாட்டைவிட்டு வெளியேறியே ஆக வேண்டும்.

– வெளிநாட்டவர் மீதான தாக்குதல் சம்பந்தமாக தொலைக்காட்சியில் புதிய நாஜி ஒருவன்.

சொல்வதோடு நின்றால் நல்லது!

● முதலமைச்சர்கள் மூளையுடன் இருப்பார்கள்; அழகாக இருக்கமாட்டார்கள். ஆனால் மூளை, அழகு இரண்டும் உள்ள முதலமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சர்தான்.

– விழா ஒன்றில் ஜெயலலிதா பற்றி நடிகர் சத்ருக்கன் சின்ஹா.

கவுண்டமணி, செந்தில் கெதி என்ன?

● எங்கள் எதிரிகள் வளரும்படி நாங்கள் ஒருநாளும் விடமாட்டோம். எங்கள் எதிரிக[illegible] தீர்த்துக் கட்டுவோம். இதுதான் எங்களுக்கு வேதம்.

– புலிகளின் உறுப்பினர் வரதன்.

அதுதானே இவ்வளவு சனங்கள் செத்திருக்கு.

● எமக்குரிய கச்சதீவை மீண்டும் பெறுவோம்.

– 'அடிமைப்பெண்---?!' ஜெயலலிதா

அப்பாடா----- இலங்கை தப்பிவிட்டதே!



படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com

இது ஒரு இலவச மாதாந்த வெளியீடு. தபாற் செலவாக 6x60 பெனிக் முத்திரைகளை அனுப்பி ஆறு மாத வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆக்கதாரர்களின் கருத்தாகும்.

புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்

ஆக்கதாரர்,வாசகர்,யாவரும் கடல் பற்றிய

தொடர்புகளுக்கு

"KADAL",

POSTFACH-1425,

4018 LANGENFELD.

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

Die Erstellung dieses Heftes wurde durch das Diakonische Werk des Evang. Kirchenkreises Leverkusen ermöglicht.

KAD 2